ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

23.02.2011 - மலர் 07, இதழ் 51




## நேரத்தைக் கணிக்கும் கருவியின் கதை

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சூளவம்சம் பதிக்கப்படல்

இலங்கைக்கு சீயத்திலிருந்து வருகை தந்த பிக்குமார்களால் கொண்டுவரப்பட்ட எழுத்துக் கோவைகளும் காணப்பட்டன. அவற்றிடையே மகாவம்சத்தின் பிரதி ஒன்றும் இருந்தது. அந்தப் பிரதியை எமது மகாவம்சத்துடன் ஒப்பிட்டு சீர்திருத்தத்தை மேற்கொள்ள மன்னர் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

எமது மகாவம்சத்தில் ஆரம்பகாலம் முதல் மகாசேன மன்னனின் காலம் வரை ஆட்சி செய்த மன்னர்களின் விபரங்களே இருந்தன. அது 'பாளி' மொழியில் எழுதப்பட்டிருந்ததோடு, முப்பத்தேழு அதிகாரங்களைக் கொண்டதாக இருந்தது. அதன்பின் எழுதப்பட்ட பகுதி சூளவம்சமாகும். அதில் முதல் பாதி 42 அதிகாரங்களைக் கொண்டது. அதன் இரண்டாம் பகுதி முதலாம் விஜயபாகு மன்னன் காலத்தில் இருந்து நான்காம் பராக்கிரமபாகு மன்னனின் காலம் வரை நடந்ததை உள்ளடக்கியுள்ளது. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் கோரிக்கைக்கு இணங்க அது அவரின் காலம் வரை மூன்றாம் பகுதியாக எழுதப்பட்டது. பிக்குகள் விகாரைகளில் வைத்திருந்த கடிதக் கோவைகளே, இவற்றை எழுதப் பயன்படுத்தப்பட்டன. புராதனகாலத்தில் மன்னர்கள் சமயப் பிரசாரத்திற்காக மேற்கொள்ளப்பட்ட விடயங்களே அவற்றில் பெரும்பாலும் குறிப்பிடப்பட்டிருந்தன.


அவ்வாறே, அக்கோவைகளில் பிக்குமார்களின் மனதில் படாத விடயங்கள் இருந்தால் அது மிகவும் சொற்பமே.

மூன்றாம் பகுதியில் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் புரிந்த சேவைகள் மிக விரிவாக எழுதப்பட்டிருந்தன. அவரின் ஆட்சிக்காலத்தில் நாடு குறித்த ஏனைய விடயங்கள் மிகக் குறைவாகவே குறிப்பிடப்பட்டிருந்தன. இதுவே வரலாறு குறித்து ஏற்பட்டுள்ள பெரும் குறைபாடாகும். இதையே மகாவம்ச மொழிபெயர்ப்பாளரான பெகும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சா/தர மாணவர்களுக்கு இருவேறு கணித பாடங்கள்

## உலக வங்கியின் ஆய்வு தெரிவிப்பு



க.பொ.த சா/தரம் பயிலும் மாணவர்களுக்கு கணித பாடமானது இரண்டு வகைகளில் வழங்கப்பட வேண்டும் என்று உலக வங்கி தனது ஆய்வில் தெரிவித்துள்ளது. உயர் தரத்தில் கணித பாடத்தைப் பயில்கின்ற மாணவர்களுக்கு தற்போதைய கணித பாடத்திட்டமானது போதிய தெளிவை, அறிவை வழங்குவதாக இல்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ள மேற்படி ஆய்வு அறிக்கை, இருவேறு தரத்தைக்கொண்ட இரண்டு வகையிலான கணித பாடங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

உயர் தரத்தில் கணித பாடத்தைத் தெரிவு செய்கின்றவர்கள், வேறு துறைகளை தெரிவு செய்கின்றவர்கள் ஆகிய இரண்டு பிரிவினர்களுக்குமே ஒரே தரத்திலான கணித பாடமே வழங்கப்படுகின்றது. அதன்படி, கணிதத் துறையை தெரிவு செய்கின்றவர்களுக்கு கூடிய தரத்தையுடைய கணித அறிவு வழங்கப்படுவதில்லை என்று கணிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த இரு வேறு பிரிவினர்களை கவனத்தில்கொண்டு இரண்டு வகையிலான கணித பாடங்களை அறிமுகப் படுத்துவதே பொருத்தமாக அமையும் என்றும் உலக வங்கியின் ஆய்வறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## உ/தரப் பரீட்சை:

# பொது ஆங்கில வினாத்தாளுக்குத் தோற்றுவது அவசியம்

க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்ற இருக்கின்ற மாணவர்கள் பொது ஆங்கிலம் (General English) பரீட்சை வினாத்தாளுக்குத் தோற்றுவது இவ்வருடம் முதல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த வினாத்தாளுக்குத் தோற்றத் தவறும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியை வழங்காதிருக்கத் தீர்மானித்திருப்பதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.



ஆங்கில ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் இந்தப் பரீட்சை வினாத்தாளுக்குத் தோற்ற வேண்டும். அவர்கள் குறித்த பாட விடைத்தாளிலேயே தமது பாடசாலையில் ஆங்கிலப் பாடத்திற்கான ஆசிரியர் இல்லாததைக் குறிப்பிட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி, பல்கலைக்கழக அனுமதியைப் பெறும் மாணவர்கள் பொது ஆங்கிலப் பாடத்தில் பெற்றுக்கொள்ளும் சித்தியின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்டு, பல்கலைக்கழக ஆங்கில கற்கைநெறியொன்றுக்கு சேர்க்கப்படுவர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ள மாணவர்களுக்கான ஆங்கிலப் பரீட்சை



இவ்வாண்டு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ள சகல மாணவர்களும் உயர் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட இருக்கின்ற ஆங்கிலப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப் படுகின்ற மாணவர்களின் ஆங்கில அறிவை பரீட்சிக்குமுகமாக நடாத்தப் படுகின்ற இந்த பரீட்சையில் பெறுகின்ற பெறுபேறுகளுக்கமைய, மாணவர்களுக்கு மூன்று மாதகால ஆங்கிலப் பாடநெறியொன்றும் நடாத்தப்படும் என உயர் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த பாடநெறியில் ஆங்கிலப் பாடத்துடன் கணினி மற்றும் மனிதவள அபிவிருத்தி போன்ற பாடங்களும் உள்ளடக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முச்சக்கரவண்டிகளில் அதிகளவு மாணவர்களை ஏற்றிச்செல்லத் தடை

முச்சக்கரவண்டிகளில் அதிகளவு பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதைத் தடை செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



முச்சக்கர வண்டிகளை பாடசாலை போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடுத்த முடியாது. ஆனால், தினமும் அளவுக்கதிகமான மாணவர்களை ஏற்றிக்கொண்டு முச்சக்கர வண்டிகள் பாடசாலை போக்குவரத்து சேவைகளில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால், அதில் பயணிக்கும் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர். இவ்வாறு அதிகளவு மாணவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டால் அதனை தடுத்து நிறுத்த அதிகாரசபை நடவடிக்கை எடுக்கும் என்றும் எனினும், தேவையானால் மூன்று மாணவர்களை ஏற்றிச் செல்லமுடியும் என்றும் ஆனால், முச்சக்கரவண்டி சாரதிகள் தமது பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் பிள்ளைகளை ஏற்றிச் செல்வதில் தடைகள் கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

60 Day's BASIC / SPOKEN ENGLISH - தபால் மூல ஆங்கில பாடநெறி

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்

7 வயது தொடக்கம் பெரியோர் வரை அனைவருக்கும் என விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH தபால் மூல பாடநெறி

அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத,வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

பாடநெறியை தொடரும் உங்களுக்கு

அழகிய T.SHIRT ஒன்று PHONE SIM CARD மற்றும்
30 DAY'S EASY WAY ENGLISH புத்தகம் ஒன்று என்பன
இலவசமாக வழங்கப்படும்

எமது BASIC/SPOKEN / DIPLOMA IN ENGLISH சான்றிதழானது வேலை வாய்ப்பு பெற மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு (Embassy ) களுக்கு செல்லுடியாகும் இதனால் உங்கள் வெளிநாட்டு பயணங்களுக்கும் VISA பெறவும் இது துணையாக அமையும்.

மேலதிக விபரங்களை பெற பெயர்,முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS செய்யுங்கள்

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

# அழியும் தேனீக்கள்



அமெரிக்காவில் கடந்த 20 ஆண்டுகளில் தேனீக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதாகவும் தேனீக்கள் அழிவடையும் ஆபத்தை பெரிதும் எதிர்நோக்கி இருப்பதாகவும் அந்நாட்டின் தேசிய அறிவியல் எகடமி இதழில் செய்தியொன்று வெளிவந்துள்ளது. அமெரிக்காவில் சில பகுதிகளில் 90% வரை தேனீக்கள் அழிந்திருப்பதாக அந்த தகவலில் மேலும் எச்சரிக்கப் பட்டுள்ளது.





தாவரங்களின் பரம்பலுக்கும் மகரந்தச் சேர்க்கைக்கும் இந்த தேனீக்கள் பெரும் துணைபுரிகின்றன. தாவரங்கள் பூப்பதும் காய்ப்பதும் இந்த மகரந்தச் சேர்க்கையின் மூலமே ஆகும். ஆக, தேனீக்கள் அழிவடைந்தால் மகரந்தச் சேர்க்கை இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைந்துவிடும். இவ்வாறு மரங்களில் பூக்கள் இன்றி, காய்கள் இன்றி இருந்தால் அது பாரிய பிரச்சினைக்கு நம்மை இட்டுச் செல்லும். தாவரங்களிலிருந்து பூக்கள், காய்-கனிகளை நுகரமுடியாமல் இருக்கும். உயிரினங்களின் உணவுத் தேவைகளை நிவர்த்தி செய்வதில் தாவரங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்நிலையில், தேனீக்களின் அழிவினால் மகரந்தச் சேர்க்கை இடம்பெறுவது தடைப் படுமேயானால், அது பாதிப் பட்டினியை உலகில் ஏற்படுத்திவிடும். அமெரிக்கா தவிர; ஆசியா மற்றும் ஐரோப்பா கண்டங்களிலும் தேனீக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பது தற்போது அவதானிக்கப்பட்டுள்ளது. நோய் பாதிப்பு, புவி வெப்ப அதிகரிப்பினால் ஏற்படும் தாக்கம், இனச்சேர்க்கை பாதிப்பு என்பன தேனீக்களின் அழிவுக்கு முக்கிய காரணங்களாக அமைந்திருக்கின்றன என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தேசிய கீதம்

***உலகில் அனைத்து நாடுகளுக்கும் அவற்றுக்கென ஓர் தேசிய கீதம், தேசிய கொடி என்று அடையாளங்கள் உள்ளன. தேசிய கீதத்தை ஆங்கிலத்தில் 'நெஷனல் அன்தம்' (National Anthem) என்று அழைப்பர். 'என்தம்' என்பது கிரேக்க மொழியில் வாய் வார்த்தைக்கு எதிரான என்ற பொருள்படும். இது 'அன்டிபோனா' என்ற சொல்லில் இருந்து பிறந்ததாகும். அன்டிபன் என்பது ஒரு குழுவினர் மற்றக்குழுவினருக்குப் பதிலளிக்கும் வகையில் இரண்டு குழுவினரால் இசைக்கும் கீதத்தைக் குறிக்கின்றது.***

'அன்தம்' என்பது அக்கால புரட்டஸ்தாந்து தேவாலயங்களில் மிகவும் அமைதியான முறையில் இசைத்த கீதத்தைக் குறிப்பதாகும். ஆரம்பத்தில் கிட்டார் இசைக் கருவியின் நாதத்துடன் குழுவாக இருந்து தேவாலயங்களில் இசைத்த கீதத்தை இது குறிக்கும். ஆனாலும், 'நெஷனல் அன்தம்' என்பது மேற்படியான அர்த்தங்களில் இருந்து வேறுபட்டு ஒரு நாடு உத்தியோகபூர்வமாக அங்கீகரித்த தேசாபிமான கீதம் சொற்கூட்டம் அல்லது இசை 'தேசிய கீதம்' (National Anthem) என்று அழைக்கப்படுகின்றது.

## வரலாறு

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரமடையும் வரையில் இந்நாட்டுக்கென் ஒரு தேசிய கீதம் இருந்ததற்கான வரலாறு இல்லை. ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து சுதந்திரம் பெற்றவுடன் இலங்கையர்களிடம் சுதந்திர வேட்கை அதிகரித்தது. சுதந்திரமாக சிந்திப்பதற்கும் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடவும் ஒரு நாட்டுக்கேயுரிய அடையாளம் தேவைப்பட்டது. அதன்படி, 'தேசிய கொடி' மூலம் ஒரு நாட்டின் ஐக்கியத்தையும் 'தேசிய கீதம்' மூலம் தன்னாதிக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் விளக்கும் அடையாளங்களாகக் கொள்ளப்பட்டது.

## 1948இற்கு முன்னர் பயன்படுத்திய தேசிய கீதம்

'எம் மன்னர் லண்டன் நகரில் என்றும் நினைக்கின்றோம்... ஜோர்ஜ் எம் மாமன்னர் மேரி அன்னை பண்பின் பிறப்பிடம் இலங்கைத் திருநாட்டையும் காத்திடும் அவர் என்றும் வாழ்க நலமுடன்' என்று பிரித்தானிய மன்னரின் புகைப்படத்தைப் பார்த்தவாறு படிக்கும் ஒரு கீதம் நடைமுறையில் இருந்திருக்கின்றது.



## தேசிய கீதத்தில் மாற்றம்

பீ.பீ.இலங்கசிங்க என்பவர் தேசிய கீதத்தை இயற்றினார். ஆனால், பின்னர் ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக, அந்த தேசிய கீதத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன. தற்போது இசைக்கப்படுகின்ற தேசிய கீதம் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்டதாகும்.

## ஆனந்த சமரகோன்



**மிகவும் அர்த்தமுள்ளதாக சிறந்த ராகத்துடன் இனிமையானதாக அமையும் விதத்தில் தேசிய கீதத்தை இயற்றிய ஆனந்த சமரகோன் பிலியந்தலையைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார். அவரின் ஆரம்பப் பெயர் ஜோர்ஜ் அல்விஸ் என்பதாகும். இந்தியாவில் சாந்தி நிலையத்தில் இசைத்துறையில் கல்வி கற்ற அவர் பின்னர் தமது பெயரை ஆனந்த சமரகோன் என்று மாற்றிக்கொண்டார். பாரதத்தின் மகாகவி ரவீந்திரநாத் தாகூரிடம் உரிய முறையில் சங்கீதம் பயின்றார். சமரகோன் அங்கு கல்வி பயின்ற 1930 ஆம் ஆண்டு காலப்பகுதியிலே 'ஜனகனமன-அதிநாயக ஜயகே' என்ற பாடலை ரவீந்திரநாத் தாகூர் இயற்றினார். 1942 ஆம் ஆண்டு ஆனந்த சமரகோன் முதன்முதலாக பாடசாலை மாணவியான சுவனா த சில்வாவுடன் நமோ, நமோ மாதா கீதத்தை இயற்றிப் பாடினார். அத்துடன், அவர் மேலும் பல பாடல்களையும் இயற்றியுள்ளார். தலைசிறந்த கலைஞரான அவர் 1962 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 ஆம் திகதி காலமானார்.**

இதனை இயற்றியவர் ஆனந்த சமரகோன் ஆவார். 'நமோ நமோ மாதா' என்ற பாடலே அதுவாகும். இப்பாடலை இவர் இயற்றி அவரது நூல் ஒன்றில் பிரசுரித்திருந்தார்.

## ஆனந்த சமரகோனின் பார்வையில்...

ஆனந்த சமரகோன் இந்தப் பாடலை இயற்ற பல காரணிகள் வழிவகுத்திருந்தன. அவர் இந்தியாவில் பல பாகங்களுக்கும் விஜயம் செய்ததோடு, இலங்கையில் பல இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து இந்நாட்டின் வனப்பு, செழிப்பு, அழகு, மனோரம்யம் என்பனவற்றைக் கவனத்தில்கொண்டு அதனை மிகத் தத்ரூபமாக தேசிய கீதத்தில் வெளிப்படுத்தியுள்ளார். அதுபற்றி அவர் குறிப்பிடுகையில், ''எமது நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு வீடு திரும்பியதும் சிந்தித்தேன். நம் நாட்டின் அழகும், செழுமையும், சிறப்புக்களும் என் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின. சிந்தனை மிகுதியால் வீட்டுக்குள்ளேயே அங்குமிங்குமாக நடந்தேன். இரவு 10 மணியளவில் விளக்குகளை அணைத்துவிட்டு இருளில் நடந்தேன். சிந்தித்தேன். என் உள்ளத்தில் உதித்த வரிகளைக் குறித்துக்கொண்டேன். மறுநாள் காலையில் தேசிய கீதமாக அதனை எழுதினேன்'' என்று அவரின் அந்த முயற்சியைக் குறிப்பிடுகின்றார்.

''நமோ நமோ மாதா'' என்று ஆரம்பமாகும் கீதத்தை 1951 ஆம் ஆண்டு தேசிய கீதமாக அமைச்சரவை அங்கீகரித்தது. இந்த விடயம் தொடர்பாக 1951 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் The Times of Ceylon என்ற ஆங்கிலப் பத்திரிகையின் முன்பக்கத்தில் 'விரைவில் தேசிய கீதம்' (Soon on National Anthem) எனும் தலைப்புச் செய்தி வெளியாகியது. அதில் 'நமோ நமோ மாதா' கீதத்தை தேசிய கீதமாக அங்கீகரிக்க சேர் ஒலிவர் குணதிலக (முதலாவது மகா தேசாதிபதி) அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார் என்று செய்தி வெளியாகியது. 1951 நொவெம்பர் 22 ஆம் திகதி அந்தக் கீதத்தை தேசிய கீதமாக அமைச்சரவை அங்கீகரித்தது. எனினும், 1952 மார்ச் 12 ஆம் திகதியே அதுபற்றிய செய்தி அறிக்கை வெளியாகியது.

## திருத்தம்

1961 பெப்ரவரியில் தேசிய கீதத்தின் 'நமோ நமோ மாதா' என்ற ஆரம்ப வாக்கியங்கள் 'ஸ்ரீலங்கா மாதா' என்று திருத்தம் செய்யப்பட்டது. அத்துடன், இடையிலும் ''நோய் நொடியற்ற'' என்ற இடத்தில் ''வெற்றியைத் தேடித் தரும்'' என்றும் திருத்தங்கள் செய்யப்பட்டன.

(ஆ)

## முதலாவது தேசிய கீதம்



இலங்கை சுதந்திரம் அடைந்த போது இந்நாட்டுக்கென்று தேசிய கீதம் ஒன்று தேவை என்று உணரப்பட்டது. இலங்கை காந்தர்வ சபை அதற்காக போட்டி நிகழ்ச்சியொன்றையும் ஏற்பாடு செய்தது. அந்த சபையின் தலைவராக அப்போதைய கல்விப் பணிப்பாளர் ஏ.ஈ.அபேசேகர நியமிக்கப்பட்டார். அந்தக் குழுவில் பீ.பீ. இலங்கசிங்க, எஸ்.எல்.பீ.கபுகொடுவ, எம்.பி.பெரேரா, கலாநிதி பெப்டங்ஜி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். 1948 பெப்ரவரி மாதத்தில் போட்டியொன்று நடத்துவதாகவும் அதில் வெற்றிபெறும் கீதத்தை தேசிய கீதமாக தேர்ந்தெடுப்பதாகவும் முடிவு செய்யப்பட்டது. தேர்ந்தெடுக்கப்படும் கீதத்திற்கு 1000 ரூபா பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

போட்டிக்காக, ஏராளமான பாடல்கள் வந்து சேர்ந்தன. பாடல்களை அனுப்பியவர்களில் காந்தர்வ சபா குழு உறுப்பினரான பீ.பீ.இலங்கசிங்கவும் ஒருவராவார். அந்தப் பாடலுக்கு இசையமைத்தவர் பிரபல இசைக் கலைஞர் லயனல் எதிரிசிங்க ஆவார். போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள் துண்டுப்பிரசுரம் வாயிலாகவும் வானொலி மூலமும் ஒலிபரப்பி மக்களது விருப்பம் பெறப்பட்டது. அதில் அதிக விருப்பையும் மக்களது வாக்குகளையும் பெற்ற பாடல் கம்பளையைச் சேர்ந்த பீ.பி.இலங்கசிங்கவின் பாடலாகும். அதன்படி, இலங்கையின் முதலாவது தேசிய கீதமாக முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனாநாயகவால் பீ.பீ இலங்கசிங்க ராலாமியின் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அப்பாடலானது (தேசிய கீதம்) 'ஸ்ரீ லங்கா மாதா- பாலா யச மஹிமா ஜய ஜய' என்று ஆரம்பமாகும் கீதமாகும். பீ.பீ.இலங்கசிங்க சிங்களம், ஹிந்தி, பாலி, சமஷ்கிருதம் ஆகிய மொழிகளில் நல்ல பாண்டித்தியம் பெற்றவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களிடையே நினைவாற்றல்

**மனிதன் இறைவனின் அற்புதமான படைப்பு. அந்தப் படைப்பிற்கான சிறந்த செல்வம் நினைவாற்றலாகும். அந்த நினைவாற்றலே மனிதனைச் சீராக இயக்கிச் செல்லும் இயந்திரமாகும்**





நினைவாற்றலானது ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றது. இதன் மூலமே மனிதன் வெவ்வேறு விதமாக வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்கிறான்.

சிலருக்கு நினைவாற்றல் மிக அதிகமாக இருக்கும். ஒரு தடவை கேட்டதை அப்படியே திருப்பிக் கூறக்கூடியவர்களும் நம்மிடையே உள்ளனர். அதேவேளை, இன்னும் சிலருக்கோ, நினைவாற்றல் மிகக் குறைவாக இருக்கும். அவர்கள் எதையும் வெகு விரைவிலேயே மறந்து விடுவார்கள். தவிர, வயது செல்லச் செல்ல நினைவாற்றல் குறைவதுமுண்டு.

வயதிற்கு அடுத்தபடியாக, நினைவாற்றலை அழிப்பது 'கவலை'யாகும். இது மலை போன்ற மனிதனைக்கூட வலு இழக்கச் செய்யும் அளவுக்கு சக்தி வாய்ந்தது.







## கல்வி

## முகாமைத்துவம் - 43

## கற்றலுக்கான ஆலோசனைகள்

### மாணவர்களின் நினைவாற்றலில் தாக்கத்தை ஏற்படுத்துபவை

பொதுவாக, மாணவர்களுக்கு ஏற்படும் சராசரிப் பிரச்சினைகளில் கவலையும் அடங்கும். மாணவர்கள் இளம் வயதினராக காணப்படுவதால், அவர்கள் உணர்ச்சிகளுக்கு அடிமையாகிவிடும் தன்மைகளை உடையவர்களாகக் காணப்படுவர். பொதுவாக, சிறு வயதில் பெற்றோர்களின் அளவுக்கு மீறிய கண்டிப்பு, எதிர்பாராதவிதமாக தீய நண்பர்களுடன் ஏற்படும் சகவாசம்-அதனால் ஏற்படும் தீய பழக்கவழக்கங்கள் போன்ற செயற்பாடுகளால் தேவையற்ற துன்பங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதன் போது, இவர்களது மனம் துன்பத்தை சார்ந்ததாகக் காணப்படும். இதனால், கற்ற விடயங்கள் நினைவில் தங்க மறுக்கும். அத்துடன், கவலையடைபவர்கள் சில வேளைகளில் தம்மையே மறந்து விடும் இயல்புடன் காணப்படுவர்.

மேலும், நினைவாற்றலை அழிப்பதில் அதிர்ச்சியும் பெரும் பங்கு வகிக்கின்றது. அதிர்ச்சி நரம்பு மண்டலத்தை உலுக்கக்கூடியது. நரம்பு மண்டலம் நினைவாற்றலுக்கு மிக அவசியமானது.



எனவே, மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் எந்தவகையிலும் அதிர்ச்சிக்குள்ளாகாமல் நிதானமாகச் செயற்பட வேண்டும். அத்துடன், நினைவாற்றலுக்கு துணைபுரியும் மற்றுமொரு பிரதான உறுப்புத்தான் மூளை. இதன்படி, நினைவாற்றலை வளர்க்க மூளைக்கு ஓய்வு அவசியமாகின்றது.

எனவே, மாணவர்கள் ஓய்வின்றி அதிக நேரம் பாடம் கற்பதால், நினைவாற்றல் சிதற வழி ஏற்படுகின்றது. ஆக, தொடர்ச்சியாகவும் அதிகம் விழித்திருந்தும் கற்பதைத் தவிர்த்து, இடைக்கிடையே ஓய்வெடுத்துக்கொள்வது மிக அவசியமாகின்றது.

மாணவர்கள் நினைவாற்றலை விருத்தி செய்யும்பொருட்டு வாழ்க்கையை இன்பமயமானதாக ஆக்க வேண்டும். நினைவாற்றல் என்பது, வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு மட்டுமன்றி; வாழ்க்கையை மகிழ்ச்சியோடு கழிக்கவும் உதவியாக இருக்கும்.

ஆகவே, கல்வி கற்கும் மாணவர்கள் கவலைகளின்றி மகிழ்ச்சியாக வாழப் பழக வேண்டும். இதுவே, நினைவை செம்மைப்படுத்த சிறந்த வழியாகும். (தொடரும்)

**-எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



களு/ஐ.எல்.எம்.ஸம்ஸுதீன் வித்தியாலய மாணவி எஃப்.றிஷ்மா, 169 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலய மாணவரான சி.துவாரகன், 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



நீரெல்லை மு.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சாஜித் அஹமட், 176 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப்.சாயிலா, 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தல்கஸ்பிடிய மு.ம.வித்தியாலய மாணவியாவார்.



எஃப்.இஸ்ரத், 181 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாவனல்லை ஸாஹிரா கல்லூரி மாணவியாவார்.



எஃப்.சஹ்மா, 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தெஹி/சுலைமானியா மத்.கல்லூரி மாணவியாவார்.



எம்.இமாம், 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நீரெல்லை மு.வித்தியாலய மாணவராவார்.



களுத்துறை மு.ம.ம.வித்தியாலய மாணவி பஸீஹா பாரூக், 184 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எதுன்கஹகொடுவ மத்.கல்லூரி மாணவி, எஃப்.மஃப்ஸா, 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப்.ருமானா, 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மா/ரஜ்ஜமன மு.வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றார்.



என்.ரிமாஸ்கான், 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நீரெல்லை மு.வித்தியாலய மாணவராவார்.



இஸ்மா ரிஸ்வான், 171 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், களுத்துறை மு.ம.ம. வித்தியாலய மாணவியாவார்.



யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலய மாணவி சி.ஸ்ரீதுவாரகா, 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



களு/அல்-பாஸியதுல் நஸ்ரியா மு.பா.ம. வித்தியாலய மாணவி இப்றா பர்வின், 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



தி/புனித ஜோஸப் கல்லூரி மாணவன் எஸ்.சேதுராகவன், 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



த.நிகல்யா, 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றார்.



கற்பிட்டி, அல்-அக்ஸா தேசிய பாடசாலையைச் சேர்ந்த மாணவன் எம்.நிலா அஹ்சன், 170 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கற்/அல்-அக்ஸா தே.பாடசாலை மாணவி பிஸ்ரின் ருஷ்னா, 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



வீ.தனுஷன், 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலய மாணவராவார்.



தென்னியன்குளம் அ.த.க.பாடசாலை மாணவன் க.பானுஷன், 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



அபுக்காகம மு.ம.வித்தியாலய மாணவன் எல்.ஸைபுல்லாஹ், 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



*மூதூர் புனித அந்தோனியார் ம.வித்தியாலய மாணவர்களான ர.விதர்சன் (149 புள்ளிகள்), அ.மிதுசன் (146 புள்ளிகள்) ஆகியோர் தங்கள் ஆசிரியை கே.பி.திலிப்குமாருடன் காணப்படுகின்றனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபாற்சேவை

மானிட நாகரிகம் தோன்றிய காலம் முதல் தகவல் பரிமாற்றத்திற்கு பல்வேறு முறைகள் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன. அதில் ஒருமுறையே பிற்காலத்தில் தபாற் சேவையாக வளர்ச்சி கண்டது. உலகின் முதலாவது தபால் சேவை என்ற சிந்தனை கி.மு.4000-2500 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எகிப்திய நாகரிகத்தில் தோற்றம் பெற்றதாக கண்டறியப்பட்டிருக்கின்றது. மண்ணால் உருவாக்கப்பட்ட தட்டில் அடையாளங்கள், சித்திரங்கள், குறியீடுகள் பதியப்பட்டு தபாலாக அக்காலப்பகுதியில் பரிமாறப்பட்டிருக்கின்றது. கல்வி, போக்குவரத்து, சர்வதேச வியாபாரம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்துடன் இணைந்து தபாற்சேவையும் வளர்ச்சியடையலாயிற்று. தபாற்சேவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒக்டோபர் 09 ஆம் திகதி சர்வதேச தபால் தினம் கொண்டாடப்படுகின்றது.



சர்வதேச தபால் சங்க இலச்சினை

## இலங்கையில் தபாற்சேவை ஆரம்பம்

17 ஆம் நூற்றாண்டின் மத்திய காலமாகிய ஒல்லாந்தர் காலத்திலேயே இலங்கையில் தபாற்சேவை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இக்காலப்பகுதியில் ஒல்லாந்தர் அவர்களது குடியேற்ற நாடுகளுக்கிடையில் தபால் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்காக படகுச் சேவையொன்றையும் அறிமுகம் செய்துள்ளனர். கடல் மார்க்கமாக இந்தச் சேவை நடைபெற்றது. 1658 ஆம் ஆண்டு இலங்கையைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் கொழும்பு, காலி, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பகுதிகளில் தபாலகங்களை நிறுவினர். அதனைத் தொடர்ந்து




நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் தபாலகங்கள் நிறுவப்பட்டன. 1796 ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைப் பிரித்தானியர் கைப்பற்றினர். பிரித்தானிய ஆட்சியில் இலங்கையின் முதல் தபால் மா அதிபராக கெப்டன் கெனடி நியமிக்கப்பட்டார்.

1815 ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் பிரித்தானியர்களின் ஆட்சியின்கீழ் வந்தது. அதனோடு, மலைநாட்டுப் பிரதேசங்கள் அடங்கலாக பெருந்தோட்டக் கைத்தொழில் இங்கு அறிமுகமாகியது. அதன் காரணமாக, தபால் சேவையை விஸ்தரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால், மேலும் தபாலகங்களை நிறுவி தபாற்சேவையை நாடளாவிய ரீதியில் விஸ்தரிப்பதற்கு பிரித்தானியர்கள் நடவடிக்கை எடுத்தனர். அத்துடன், இலங்கையில் முதலாவது தபால் மாஅதிபராக பதவி வகித்தவர் வாசலமுதலி ஏ.ஜி.திலகரத்ன என்பவராவார்.



வெளி இடங்களுக்கான தபால்
கொழும்பு பிரதேச தபால்
வெளிநாட்டு தபால்

## தபால் போக்குவரத்து



இலங்கையில் தபாற்சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப காலங்களில் போக்குவரத்து சிரமங்கள் நிலவின. இடத்திற்கிடம் தபால்களைக்கொண்டு செல்வதற்காக மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள், ரிக்ஷா, சைக்கிள், குதிரைகள் என்பன பயன்படுத்தப்பட்டன. பிற்காலத்தில் மோட்டார் வாகனங்கள், கப்பல், விமானம் என்பன இச்சேவைக்குப் பயன்படுத்தப்பட்டன.



## கடல் கடந்த தபாற்சேவை



நாடுகளைக் கண்டுபிடித்தமை, கடல் மார்க்கப் பாதைகள் அறிமுகம், நாடு கடந்த வர்த்தகம், கைத்தொழிற் புரட்சி, உல்லாசப் பிரயாணத்துறை வளர்ச்சி என்பன கடல் கடந்த தபாற்சேவையின் அறிமுகத்திற்கு வழிவகுத்தன. கடல் மார்க்க தபாற்சேவை அறிமுகமாகிய ஆரம்ப காலகட்டத்தில் வர்த்தக, வாணிப சரக்குக் கப்பல்களை பிரித்தானியர்கள் தபால்களைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தினர். 1850 ஆம் ஆண்டளவில் கடல் மார்க்கமாக தபால்களைக் கொண்டு செல்வதற்காக, தனியான கப்பல் சேவைகளை ஆரம்பிக்கும் நிலை ஏற்பட்டது. அதற்காக பிரித்தானியா முதன்முதலாக 'ஒரியன்டல் நெவிகேஷன்' என்ற கப்பற் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டது. அந்தக் கப்பல் தபாற் சேவையுடன் இணைந்து இலங்கையில் இருந்தும் கடல் கடந்த தபாற்சேவை நடைபெற்றது.

பல கப்பல் சேவை நிறுவனங்கள் இலங்கையில் இருந்து கடல் கடந்த நாடுகளுக்கு தபால்களைக் கொண்டு செல்லும் பணியை மேற்கொண்டன.

## விமானத் தபால்



1920 ஆம் ஆண்டளவில் இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தபாற்சேவைக்காக விமானங்களை ஈடுபடுத்தின. 1937 ஆம் ஆண்டளவில் ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளின் நகரங்களுக்கு தபால்களை அனுப்புவதற்காக 'எம்பயர் எயார் மெய்ல்' என்ற சேவை ஆரம்பிக்கப்பட்டது. 1935 ஆம் ஆண்டு இலங்கையில் இரத்மலானை விமான நிலையம் நிர்மாணிக்கப்பட்டது. அந்த விமான நிலையம் தபால் பரிமாற்ற நடவடிக்கைகளுக்கான விமான சேவைக்காகவே நிர்மாணிக்கப்பட்டதாகும். 1936 ஆம் ஆண்டு முதலாவதாக இந்தியாவின் டாடா விமான சேவைக்குச் சொந்தமான விமானம் ஒன்று பாகிஸ்தானின் கராச்சியில் இருந்து தபால்களை எடுத்துக் கொண்டு இரத்மலானை விமான நிலையத்தில் தரை இறங்கியது. அத்துடன், இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் இலங்கையில் எயார் சிலோன் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஊடாக, இலங்கையில் இருந்து ஆகாயமார்க்க தபாற்சேவையும் ஆரம்பமாகியது. அன்றுமுதல் இலங்கையில் பல்வேறு நாடுகளுக்கான தபால் விநியோகம் மேலும் பல உலக நாடுகளின் விமான சேவைகள் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

## தேசிய தபால் அரும் பொருட்காட்சியகம்

இலங்கையின் தபாற்சேவையினதும் தொலைத்தொடர்பு சேவையினதும் ஆரம்பகால முறைகள் மற்றும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட உபரகணங்கள், பொருட்கள் என்பன இந்த அரும் பொருட்காட்சியகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. தபால் முத்திரைகள், முதல்நாள் கடித உறை மற்றும் தபால் சேவையின் சிறப்பம்சத்தைக் குறிக்கும் பல விடயங்களை இந்த அரும் பொருட்காட்சியகத்தில் பார்வையிடலாம்.



6 ஆம் ஜோர்ஜ் மன்னர் காலத்தில் தபால் கொண்டு செல்லும் வாகனத்தின் சின்னம்



1938 ஆம் ஆண்டின் பிரதான டெலிகிராப் அலுவலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ற்றி அறிவோம்





இலங்கையின் முதலாவது முத்திரை





உலகின் முதலாவது முத்திரை



## சர்வதேச தபாற்சங்கம்

அனைத்து விடயங்களும் சுறுசுறுப்பாகவும் திறம்படவும் இயங்கும் இன்றைய கால கட்டத்தில் தபாற் சேவையும் திறம்பட இயங்க வேண்டும் என்பது தபாற்துறை நிர்வாகிகளின் எதிர்பார்ப்பாகும். இந்தக் குறிக்கோளை நோக்கமாகக்கொண்டு 1863 ஆம் ஆண்டு அமெரிக்காவின் தபால் மாஅதிபர் மொன்ரிகோமரின் வழிகாட்டலில் பிரான்சின் பாரிஸ் நகரத்தில் சர்வதேச மாநாடொன்று கூட்டப்பட்டது.

அதுவரையில் நடைமுறையில் இருந்த இருதரப்பு உடன்படிக்கைகள், சர்வதேச தபாற்சேவையை திறம்பட மாற்றியமைக்கப் போதியதாக இன்மையால் சர்வதேச தொடர்பு விரிவாக்கம் அவசியம் என்பது உணரப்பட்டது.

அந்த மாநாட்டில் வடஜேர்மனியின் தபாற்சேவையில் உயர்பதவி வகித்த வோன் ஸ்டீவன் மற்றொரு சர்வதேச மாநாடு கூட்டப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தார். அதன்படி, 1874 ஆம் ஆண்டு 22 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றிய மாநாடொன்று சுவிட்சர்லாந்தில் கூட்டப்பட்டது.

அந்த மாநாட்டின் தீர்மானத்தின்படி, ஒக்டோபர் 09 ஆம் திகதி 'பொது தபாற் சங்கம்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. 1969 ஆம் ஆண்டு இந்த அமைப்பு ஐ.நா அமைப்பின் முக்கியமான ஓர் அங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த வருடம் ஜப்பானின் டோக்கியோ நகரில் ஒரு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி சர்வதேச தபால் தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. பின்னர் 1970 ஆம் ஆண்டு ஹம்பர்க் நகரில் நடைபெற்ற மாநாட்டின் முடிவில் சர்வதேச தபால் தினம் என்பது உலக தபால் தினம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தற்போது இலங்கை உட்பட, 193 நாடுகள் அனைத்து தபாற் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றன. இந்த சங்கத்தின் தலைமையகம் சுவிட்ஸர்லாந்தின் பர்ன் நகரத்தில் அமைந்திருக்கின்றது. அனைத்து நாடுகளதும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் வகையில் 4 வருடங்களுக்கு ஒருமுறை இந்த அனைத்து தபாற்சங்கத்தின் மாநாடு நடைபெறும்.

## தபால் முத்திரையின் ஆரம்பம்



ஆரம்பகாலத்தில் கடிதங்களைப் பெறுபவரிடம் இருந்து கட்டணம் அறவிடப்பட்டது. அதனால், சிரமங்கள் பல நிலவின. அதற்குத் தீர்வு காணும் வகையில் தபால் முத்திரை வடிவமைக்கப்பட்டது. அதன்படி, 1840 ஆம் ஆண்டு உலகில் முதன்முதலாக இங்கிலாந்தில் தபால் முத்திரை ஆறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அந்த முத்திரையின் இன்றைய பெறுமதி 50,000 ஸ்ரேலிங் பவுண்களாகும். எனினும், அந்த முத்திரையை வடிவமைத்த இங்கிலாந்து நாட்டின் பெயர் அதில் அச்சிடப்பட்டிருக்கவில்லை. தமது நாட்டின் பெயரை அச்சிடாமல் முத்திரைகளை வெளியிடும் ஒரே ஒரு நாடு இங்கிலாந்தாகும். சர்வதேச தபால் சங்கம் அந்த முறையைப் பின்பற்றி வருவதானது உலகில் முதன்முதல் தபால் முத்திரையை அறிமுகம் செய்த நாடான இங்கிலாந்தைக் கௌரவிக்கும் வகையிலாகும்.

இலங்கையின் முதலாவது தபால் முத்திரை 1857 ஏப்ரல் முதலாம் திகதி வெளியிடப்பட்டது. அந்த முத்திரையில் விக்டோரியா மகாராணியின் சிரசுருவம் அச்சிடப்பட்டிருந்தது. ஆரம்பகாலத்தில் இலங்கை வெளியிட்ட முத்திரைகளில் அரச தலைவர்களின் படங்கள் மட்டுமே பொறிக்கப்பட்டிருந்தன. பிற்காலத்தில் நாட்டின் இயற்கைக் காட்சிகள், வரலாற்று மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்கள் என்பன தபால் முத்திரைகளில் அச்சிடப்பட்டன.

தபால் விநியோக ரிக்ஷா வண்டி





தபால் விநியோகத்திற்காக பயன்படுத்தப்பட்ட ஆரம்பகால சைக்கிள்



தபால் சீருடை



1944 ஆம் ஆண்டு காலப்பகுதி தபால் விநியோக வேன்

## சர்வதேச தபால் தினம்

ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 9 ஆம் திகதி சர்வதேச தபால் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. சர்வதேச தபால் சங்கம் அத்தினத்தைக்கொண்டாட வருடாந்தம் ஒரு கருப்பொருளை முன்வைப்பதுண்டு. கடந்த வருடம் சர்வதேச தபால் தினத்தை முன்னிட்டு 'செயற்றிறன் கொண்ட பூலோக தபாற் சேவையை நோக்கி' என்ற கருப்பொருள் முன்வைக்கப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டது. அத்தினத்தில் நாடளாவிய ரீதியில் தபாற்சேவையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும் தபால் துறையில் பணியாற்றும் ஊழியர்களின் நன்மதிப்பை நாடறியச் செய்யும் வகையிலும் அவர்களைத் தொடர்புபடுத்தியதாக பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தேசிய தபால் கலைநிகழ்ச்சிகள், தேசிய தபால் விளையாட்டு நிகழ்ச்சி, முத்திரைக் கண்காட்சி, பாடசாலை மற்றும் வளர்ந்தோர், முத்திரைச் சங்கங்கள் ஆகியவற்றுக்கிடையேயான போட்டி நிகழ்ச்சிகள் என்பன இந்த சர்வதேச தபால் தின அனுஷ்டிப்பின் முக்கிய அம்சங்களாகும்.

## முத்திரைப் பணியகம்



இலங்கை முத்திரைப் பணியகம் 1967 ஜனவரி 01 ஆம் திகதி தபால் தொலைத்தொடர்பு திணைக்களத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அதற்கு முன்னரே பிரதம தபாலகத்தில் அதற்கான பிரிவு ஒன்று இயங்கியது. முத்திரை வடிவமைப்பு, அச்சிடல், வெளியிடல் ஆகிய பணிகள் இந்தப் பணியகம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. 1972 ஆம் ஆண்டு வரையில் இப்பணிகள் வருமானவரித் திணைக்களத்திடமே இருந்து வந்தது.

1972 ஆம் ஆண்டின் பின்னர் இப்பணிகள் இலங்கை முத்திரைப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. முத்திரைகள், கடித உறை, தபாலட்டை, விமானத்தபால் நினைவு முத்திரை வெளியிடல், வடிவமைத்தல் உட்பட, அனைத்துப் பணிகளும் முத்திரைப் பணியகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

## இலங்கை தொலைத்தொடர்பு சேவையின் ஆரம்பம்



1875 ஆம் ஆண்டு தபால் திணைக்களத்தினால் 'டெலிகிராப்' சேவை ஆரம்பிக்கப்பட்டது. முதல் முறையாக கொழும்பில் இருந்து காலிக்கு டெலிகிராப் (தந்தி) தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. அதே வருடம் கொழும்பில் இருந்து தலைமன்னாருக்கும் டெலிகிராப் தொடர்பு சேவை விரிவுபடுத்தப்பட்டது. 1882 ஆம் ஆண்டு கொழும்பில் இருந்து 600 மைல் தொலைவில் உள்ள மதுரைக்கு டெலிகிராப் தந்திச் சேவையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு, அதன் பணிகள் 1885 ஆம் ஆண்டுடன் முடிவடைந்தன. அதன்மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தொடர்பாடல் பரிவர்த்தனை சேவை நடைபெற்றது. பின்னர் கொழும்பு தம்புல்லை, திருகோணமலை ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் தந்திச்சேவை ஏற்படுத்தப்பட்டதாயினும் காலப்போக்கில் காட்டு யானைகளால் அந்த டெலிகிராப் இணைப்புக்கு பாதிப்பு ஏற்பட்டது. பின்னர் அந்த சேவை கொழும்புக்கும் திருகோணமலைக்கும் இடையிலான மின்தொடர்பு தந்திச்சேவையாக இணைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்திய அரசாங்கத்தால் நடத்திச் செல்லப்பட்ட இந்த டெலிகிராப் தந்திச்சேவை 1880 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்க உடைமையாகியது.

எம்.எஸ். அமீர்ஹுசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ருவாண்டா

**அரசு:** குடியரசு.
**சுதந்திரம்:** பெல்ஜியத்திடமிருந்து, 1962 ஜூலை 1 ஆம் திகதி.
**தேசிய பெயர்:** ரிபப்லிக்கா யு ருவாண்டா (ருவாண்டா குடியரசு- Republic of Rwanda).
**அதிபர்** (2000: போல் ககாமே.
**பிரதமர்** (2000): பேர்னாட் மகுஸா.

## புவியியல்

ருவாண்டா, ஒரு கிழக்கு-மத்திய ஆபிரிக்க நாடாகும். இதனைச் சூழ கொங்கோ ஜனநாயகக் குடியரசு, உகண்டா, தன்ஸானியா மற்றும் புருண்டி ஆகிய நாடுகள் அமைந்துள்ளன. நாட்டில் பெரும்பாலும் உயரமான மலைகளும் ஆழமான பள்ளத்தாக்குகளும் காணப்படுகின்றன. வடமேற்கே 4,829 அடி (1,472m) உயரத்தில் கிவு ஏரி அமைந்துள்ளது. இதுவே ஆபிரிக்காவின் மிக உயரமான ஏரி ஆகும். வடக்கில் விருங்கா மலை காணப்படுகின்றது. இதில்தான் மிக உயர்ந்த மலைச்சிகரமான கரிஸிம்பி மலைச்சிகரம் காணப்படுகின்றது.

**மொத்தப் பரப்பு:** 10,169 (26,338 ச.கி.மீ); **மொத்த நிலப்பரப்பு:** 9,633 ச.மைல் (24,949 ச.கி.மீ)
**தலைநகரமும் பெரிய நகரமும்:** கிகாலி.
**உயர் மலைச்சிகரம்:** கரிஸிம்பி மலை (4,507 மீற்றர்); **தாழ் மையம்:** ருஸிஸி நதி (950 மீற்றர்).
**மக்கள் தொகை** (2010): 11,055,976.
**நாணயம்:** ருவாண்டா ஃப்ரேங்க்.
**மொழிகள்:** கின்யார்வண்டா, பிரெஞ்ச் மற்றும் ஆங்கிலம் (இவை அனைத்தும் உத்தியோகபூர்வ மொழிகள்).
**இனக்குழுக்கள்:** ஹுட்டு 84%, டுட்ஸி 15%, டுவா (பிக்மொய்ட்) 1%.
**சமயங்கள்** (2001): ரோமன் கத்தோலிக்கம் 56.5%, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 26%, அட்வண்டிஸ்ட் 11.1%, இஸ்லாம் 4.6%, உள்ளூர் நம்பிக்கைகள் 0.1%, மதமற்றோர் 1.7%.
**எழுத்தறிவு** (2003): 70%.
**இணையத்தளக் குறியீடு:** .rw
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 250.
**தேசிய கீதம்**
Rwanda
nziza Gihugu
cyacu
Wuje imisozi,
ibiyaga n'ibirunga
Ngobyi iduhetse gahorane ishya.
Reka tukurate tukuvuge ibigwi…என ஆரம்பமாகின்றது.










தலைநகரின் ஒருபகுதி






கிவு ஏரி

## வரலாறு

1919 ஆம் ஆண்டு தொடக்கம் புருண்டியுடன் ஒன்றிணைந்திருந்தது. ஐக்கிய நாட்டின் டிரஸ்ட் பகுதி என்னும் நிலையில் பெல்ஜியத்தின் ஆதிக்கத்திற்குட்பட்டது. 1961 இல் புருண்டியும் 1962 இல் ருவாண்டாவும் சுதந்திரமடைந்தன. 1994 இல் இரு நாட்டு ஜனாதிபதிகளும் பயணம் செய்த விமானம் விபத்துக்குள்ளாகி இருவரும் உயிரிழந்தனர். அத்துடன், ஹுட்டு-டுட்ஸி இன மக்களிடையே அவ்வப்போது நிகழும் இனக்கலவரங்கள் மூலம் லட்சக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். 2000 ஆம் ஆண்டு ஏப்ரலில் அதிபராகப் பதவியேற்ற போல் ககாமே ருவாண்டாவின் முதல் டுட்ஸி அதிபராவார்.


ருஸிஸி நதி

## காலநிலை

ருவாண்டாவின் காலநிலை சற்று வித்தியாசமான தன்மையைக்கொண்டு காணப்படுகின்றது. இங்கு இரண்டு ஈரப் பருவ காலங்களும் இரண்டு உலர் பருவ காலங்களும் உள்ளன. குறுகிய ஈரப்பருவம் ஒக்டோபர் முதல் நொவெம்பர் வரை நிகழும். எனினும், பிரதான மழைக்காலமாகிய முக்கிய ஈரப்பருவமானது மார்ச் மாத நடுப்பகுதியில் ஆரம்பித்து மே மாத இறுதியில் முடிவடையும். உலர் பருவகாலங்களில் ஒன்று டிசம்பரில் ஆரம்பித்து மார்ச் நடுப்பகுதி வரை நீடிக்கும். அடுத்தது ஜூனில் ஆரம்பித்து, ஒகஸ்ட்டில் முடிவடையும்.


தேசிய இலச்சினை


ஜனாதிபதி


பிரதமர்

## கலாசாரம்

ஆபிரிக்காக் கண்டத்தின் பல நாடுகளின் கலாசாரத் தாக்கங்கள் ருவாண்டாவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ருவாண்டாவின் காலனித்துவ ஆட்சிக்கு முன், பன்யார்வாண்டா எனும் ஒரே ஒரு இனக்குழுவே இருந்தது. பின்னர் அவர்கள் தமது மொழி மற்றும் பாரம்பரிய கலாசாரத்தைப் பகிர்ந்து கொண்டனர். வருடமொன்றிற்கு 11 நிரந்தர தேசிய விடுமுறை தினங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மாதத்தினதும் இறுதி சனிக்கிழமை 'உமுகண்டா' எனும் தேசிய தினம் சமூகப் பணிக்காகக் கொண்டாடப்படுகின்றது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2005): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 22,000; செல்லிடத் தொலைபேசிகள்: 290,000.
**வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2002): FM 3, SW 1.
**தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2004): 2. **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 15,92; **இணையத்தளப் பாவனையாளர்கள்:** 65,000.



## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்** (2004): மொத்தம் 14,008 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 2,662 கி.மீற்றர்; செப்பனிடப்படாதவை 11,346 கி.மீற்றர்). **நீர்வழிப் போக்குவரத்து:** லக்கியு. **துறையும் துறைமுகமும்:** கியான்குகு, கிசென்யி, கிபுயி. **விமான நிலையங்கள்** (2007): 9.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 46%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கோப்பி, தேயிலை வாழைப்பழங்கள், அவரை வகைகள், கிழங்கு வகைகள், கால் நடைகள். **தொழிலாளர் தொகை** (2000): 4.6 மில்லியன்.
**பிரதான கைத்தொழில்கள்:** சீமெந்து, விவசாய உற்பத்திகள், தளபாடங்கள், புடவை. **இயற்கை வளங்கள்:** தங்கம்,மெதேன், நீர்மின்வலு, பயிர்ச்செய்கை நிலம்.
**ஏற்றுமதிகள்** (2009): கோப்பி, தேயிலை, தகர உருக்கு. **இறக்குமதிகள்** (2004): உணவுப் பொருட்கள், இயந்திரங்களும் இயந்திர உதிரிப்பாகங்களும், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள்.
**பிரதான வர்த்தகப் பங்காளிகள்** (2004): இந்தோனேஷியா, சீனா, ஜேர்மனி, கென்யா, பெல்ஜியம், உகண்டா, பிரான்ஸ்.


கரிஸிம்பி மலையுச்சி



## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✱ க்ருகர் தேசிய பூங்கா ✱ வோல்கனோஸ் தேசிய பூங்கா ✱ கிகாலி ஞாபகார்த்த மையம் ✱ யுங்வே காடுகள் ✱ அகாகெரா தேசிய பூங்கா ✱ முஸான்ஸி குகை ✱ ருசுமோ நீர்வீழ்ச்சி.


ருசுமோ நீர்வீழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் சர்வாதிகாரமும் தான்தோன்றித்தனமும் ஏற்பட்ட போது, அது ஏனையவரின் உரிமைகளைப் பாதிப்புக்குள்ளாக்கியது மட்டுமல்ல; அதுவே போராட்டமாக வெடிக்கவும் காரணமாக அமைந்தது. பேரரசுகளுக்கிடையே தோன்றிய நாடுகளை விஸ்தரிக்கும் போக்கு, பல ஆண்டுகளாக ஐரோப்பியர்களிடையே நிலவிய குரோதத்தன்மை, பகைமை இனங்களுக்கிடையே ஏற்பட்டு இறுதியில் உலக மகாயுத்தங்களாக மாற்றம் பெறலாயின. எனவேதான், உலக யுத்தங்கள் இனிமேல் ஏற்படக் கூடாது என்கிற வகையில் சர்வதேச சங்கம் (League of Nation), ஏற்படுத்தப்பட்டது. அது பின்னர் ஐக்கிய நாடுகள் தாபனம் (UNO) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இன்று வரை சமாதான, சகவாழ்வு உலகம் முழுவதும் ஏற்பட்டு, மனிதன் மனிதனாக வாழவேண்டும் போன்ற உயர் இலட்சியங்களுடன் தனது பணிகளை ஆற்றிவருகின்றது. இவ்வாறு, உலகில் அழிவுகளை ஏற்படுத்திய முக்கியமான வரலாற்றுத் தடங்களைப் பதித்துச் சென்ற இரு உலக மகாயுத்தங்களின் வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

# உலக மகாயுத்தங்கள்





## உலக மகாயுத்தங்கள் ஏற்படுவதற்குப் பின்னணியாக இருந்த சில காரணங்கள்

பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு நோக்குகளுடன் உருவாகிய ஏகாதிபத்தியப் போட்டிகளின் இறுதிப் பலனே இந்த யுத்தங்களாகும். கைத்தொழில் புரட்சியின் பின்னர் வேகமாக அபிவிருத்தியை நோக்கி நடைபோட்ட ஜேர்மன், புதிதாக ஐக்கியப்பட்ட இத்தாலி, சுதந்திர நாடாக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த ஐக்கிய அமெரிக்கா, பனி உறையாத துறைமுகத்தைத் தேடிக்கொண்டிருந்த ரஷ்யா, ஆசியாவின் பலம் பொருந்திய வல்லரசாக மாற நினைத்த ஜப்பான் போன்ற நாடுகள் தமது கைத்தொழில் முடிவுப் பொருட்களை விற்பதற்கான சந்தைகளைப் பெறுவதற்காகத் துடித்துக்கொண்டிருந்த அன்றைய முக்கிய நாடுகள் எனலாம்.





## முதலாவது உலக மகாயுத்தம் (1914-1918)

**நீண்டகாலக் காரணிகளாக அமைந்திருந்தவை:**

1. ஜேர்மனியின் ஏகாதிபத்தியக் கொள்கை.
2. இராணுவப் படைப்பெருக்கம்.
3. குடியேற்றப் போட்டிகளும் நாட்டினவாத எழுச்சியும்.
4. ஐரோப்பா இரு அணிகளாகப் பிரிந்தமை.
5. தேசிய ரீதியில் எழுச்சி பெற்ற அரசுகளின் வேட்கைகள்.


**உடனடிக் காரணம்:**

போருக்கான உடனடிக் காரணியாக அமைந்திருந்தது சரஜீவோ படுகொலையாகும். அதாவது, ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசன் பிரான்சிஸ் பேர்னந்தின் மனைவியான இளவரசி 1914 ஜூன் மாதம் 28 ஆம் நாள் பொஸ்னியாவின் சரஜீவோ நகரில் வைத்து ஷேர்பிய இனத்தவன் ஒருவனால் கொலை செய்யப்பட்டார். ஆஸ்திரியா ஜேர்மனுக்கு சார்பான நாடாக இருந்தமையால் ஜேர்மனி சேர்பியாவுக்கு விரோதமாக யுத்தப் பிரகடனம் செய்தது. சேர்பியாவுக்கு உதவ நேச அணியினர் முன்வந்தனர். இதுவே, முதலாம் உலக மகாயுத்தத்திற்கு வழிகோலியது.

**1. ஜேர்மனியின் ஏகாதிபத்தியக் கொள்கை:** 'பிஸ்மார்க்' ஜேர்மனியின் ஐக்கியத்தைப் பாதுகாக்கவும் எதிரி நாடான பிரான்ஸைத் தனிமைப்படுத்தும் நோக்குடனும் அயலிலுள்ள ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டான்.

**2. இராணுவ படைப்பலப் பெருக்கம்:** இங்கிலாந்து, ஜேர்மனியின் கடற்படை ஆதிக்கப் போட்டியும் பகைமையும் அச்சமும் படைப் பலப் பெருக்கத்திற்கு முக்கிய காரணமாகின. பேரரசன் வில்லியம் பேர்லினிலிருந்து பக்தாத் வரை புகையிரதப்பாதை அமைப்பதைப் பிரித்தானியா தனது கீழைத்தேய பேரரசுக்கு ஆபத்தாகக் கருதியது. ஜேர்மனி போர்ப் பலத்தையும் கடற்படைப் பலத்தையும் கட்டி எழுப்பியமை, கீழ் கால்வாயை வெட்டி ஆழமாக்கியமை பிரித்தானியா தனக்கு விடப்பட்ட சவாலாகக் கருதியது.





### யுத்தத்தில் பங்குபற்றிய நாடுகளும் அதன் தலைவர்களும்

ஜேர்மனி - கைசர் வில்லியம்
ஆஸ்திரிய ஹங்கேரி - பிரான்சிஸ் யோசப்
பிரிட்டன் - லொஜிட் ஜோஜ்
பிரான்ஸ் - கிளமென்சோ
அமெரிக்கா - வூட்றோ வில்சன்
இத்தாலி - ஒலன்டோ
ரஷ்யா - சார் நிக்களஸ்
பெல்ஜியம் அல்பேர்ட்

## இரண்டாம் உலக மகாயுத்தம் (1939-1945)

**1. நீண்டகாலக் காரணிகள்:**

1. ஜேர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லரின் எழுச்சியும் ஆக்கிரமிப்பும்.
2. நாசிசவாதம் ஜேர்மனி முழுவதும் பரவியமை.
3. இத்தாலியில் பாசிசவாதமும் முசோலினியின் கொள்கைகளும்.
4. ஜப்பான் ஆசியாவின் பலம் பொருந்திய வல்லரசாகும் நப்பாசையில் ஆக்கிரமிப்புக் கொள்கை.
5. உலக மகாயுத்தத்தின் பின்னர் அமையப் பெற்ற சர்வதேச சங்கத்தின் தோல்வி.

**2. உடனடிக் காரணிகள்:**

1. ஜேர்மனியின் ஆக்கிரமிப்புக்கள். அதாவது, ஜேர்மனி, போலந்தை ஆக்கிரமித்தமை முக்கியமானதாகும். போலந்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இருந்த ரஷ்யாவுக்கு இந்த நடவடிக்கை பெருத்த ஏமாற்றமாகியது. ஆதலால், பிரான்ஸும் பிரித்தானியாவும் இணைந்து ஜேர்மனிக்கு எதிராகப் போர்ப்பிரகடனத்தைச் செய்தன. பின்னர் அந்த யுத்தத்தில் ஜேர்மனி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஹிட்லரின் எழுச்சியும் ஆக்கிரமிப்பும்:** இந்நிலையில் சர்வாதிகாரியான அடோல்ப் ஹிட்லரின் பாரிய எழுச்சியானது தடுக்கமுடியாத ஒன்றாகியது. ஹிட்லர் சிறந்த நாவன்மையும் சிறந்த ஆளுமையும் கொண்டவனாகக் காணப்பட்டான். இதன் காரணமாக, ஜேர்மனியர்களிடம் தனது இனத்துவத்தின் உயரிய தத்துவத்தை மக்கள் முன்னிறுத்தி தேசப்பற்றைத் தூண்டிவிட்டான். யுத்தத்திற்கு வழிகோலினான்.

**ஜப்பானிய ஆக்கிரமிப்புக் கொள்கை:** ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றத்தைப் பின்பற்றி அடைந்த பெரு முன்னேற்றம் காரணமாக, தனது சந்தைகளை குடியேற்ற நாடுகளில் ஏற்படுத்த தீவிரமாகச் செயற்பட்டன. இது மேற்கத்தேய ஏகாதிபதிகளுக்கு அச்சுறுத்தலாகவும் இருந்தது. நாட்டிலுள்ள இளைஞர்களின் கவனத்தை உள்நாட்டு விடயங்களிலிருந்து திசை திருப்பவும், ஜப்பானிய பேரரசு ஒன்றைத் தாபிக்கும் நோக்குடனும் ஆக்கிரமிப்புக்களில் ஈடுபட்டதனால் உலக யுத்தத்திற்கு இவை வழிவகுத்தன.

**சர்வதேச சங்கத்தின் தோல்விகள்:** வல்லரசு நாடுகள் இச்சங்கத்திலிருந்து விலகியது மட்டுமல்லாது ஆக்கிரமிப்புக்கள் அமைதிக்கான ஆபத்தினை வெளிப்படுத்தி நின்றன. 1940 இல் பிரித்தானியாவும் பிரான்ஸும் மட்டும் வல்லரசுகளில் அங்கத்துவம் பெற்றிருந்தன. இவை ரகசிய உடன்படிக்கைகளை தடுக்க முடியாது தத்தளித்தன.

முதன்முதலாக, இந்த யுத்தத்தில் அணுகுண்டுகள் ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்களின் மீது வீசப்பட்டன. அழிவின் கொடூரத்தை உணர்த்தி நிற்கும் இவ்வாறான அநாகரிகமான யுத்தங்கள் மட்டுமல்ல; பிராந்திய யுத்தங்கள்கூட இனிமேல் ஏற்படாது, உண்மையான மனித நாகரிகம் மேலோங்க அரசுகளும் அமைப்புக்களும் இன்றும் பாடுபட்டு உழைத்து வருகின்றன.

### யுத்தத்தில் பங்குபற்றிய நாடுகளும் அதன் தலைவர்களும்

இங்கிலாந்து - நெவில் சேம்பர்ளின் மற்றும் வின்ஸ்ரன் சேர்ச்சில்
ஜேர்மனி - ஹிட்லர்
இத்தாலி - பெனிற்றோ முசோலினி
ரஷ்யா - ஜோசப் ஸ்ராலின்
பிரான்ஸ் - டி கோல்
ஜப்பான் - ஹீரோஹிற்றோ சக்கரவர்த்தி
ஐ.அமெரிக்கா - பிராங்ளின் ரூஸ்வெல்ட்

எஸ்.எல். மன்சூர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## வினாத்தாள் - I (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ........................................ நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

26. அரச இலச்சினையிலுள்ள  இவ்வடிவம் வெளிப்படுத்தும் கருத்து;

(1) தூய்மை (2) தர்மம் (3) சௌபாக்கியம் (4) உலக நிலைப்பாடு

27. பாடசாலை மாணவர்களால் ஆக்கப்படக்கூடிய புத்தளிப்புக் கருவி;


(1) சல்லாரி (2) கொம்பு (3) ரம் (4) தம்பட்டம்

28. கிராமிய விளையாட்டு எது?

(1)  (2)  (3)  (4) 


★ நான்கு பூக்களின் வரிப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அடைப்புக்குள் தரப்பட்டுள்ள பெயர்களிடையே ஒவ்வொரு வரிப்படத்திற்கும் உரிய பெயரைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை வரிப்படத்தின் கீழுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. அகத்தி | 2. கடதாசிப்பூ | 3. நீல அல்லி | 4. லில்லிப்பூ |
| 5. குண்டுமல்லிகை | 6. ஓக்கிட் | 7. சூரியகாந்தி | 8. தாமரை |


29.  (............)
30.  (............)
31.  (............)
32.  (............)

★ உருவில் காட்டப்பட்டுள்ள இசைக்கருவிகளை இனங்கண்டு அவற்றின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களிலிருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. தாளம் | 2. கொம்பு | 3. புல்லாங்குழல் | 4. ரம் |
| 5. மரக்காஸ் | 6. வயலின் | 7. தம்புரா | |


33.  (............)
34.  (............)
35.  (............)
36.  (............)


37. தோட்டமொன்றிலிருந்து பறிக்கப்பட்ட தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை 3,700 ஆகும். அவற்றில் 899 தேங்காய்கள் விற்கப்பட்டன. எஞ்சியுள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?..........................

38.  இவ்வுருவில் தனியாக அமைந்த 9 சிறிய முக்கோணிகள் உள்ளன. இவ்வாறான 86 முக்கோணிகளில் உள்ள சிறிய முக்கோணிகள் எத்தனை?..........................

39. 720 மாம்பழங்கள் 4 பைகளில் சமனாக இடப்பட்டன. ஒரு பையில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?..........................

40. மோட்டார் வாகனமொன்றில் 27l பெற்றோல் இருந்தது. பயணமொன்றின் பின்னர் அதில் 19l 850ml பெற்றோல் எஞ்சியிருந்தது. பயணத்திற்கு செலவாகிய பெற்றோலின் அளவை லீற்றர், மில்லி லீற்றரில் தருக..........................

41.  இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?..........................

42. 

இவ்வுருவின் சுற்றளவைக் காண்க..........................

43. கணித செய்கையை அவதானித்து அடைப்புக்குள் வரவேண்டிய இலக்கத்தை எழுதுக.

(1) $$\begin{array}{r} \square\ 4\ 8 \\ +\ 1\ \square\ 6 \\ \hline 9\ 1\ 4 \end{array}$$

(2) $$\begin{array}{r} \square\ \square\ 7 \\ -\ 2\ 6\ 9 \\ \hline 3\ 6\ 8 \end{array}$$

44. 6m நீளமான கம்பித்துண்டு ஒன்றில் 2m 75cm நீளமுள்ள ஒரு துண்டு வெட்டப்பட்டது. மீதித் துண்டின் நீளம் யாது?............ m ............ cm

45. வெற்றிடத்தில் வரவேண்டிய சமவலுப் பின்னங்களுக்குரிய இலக்கங்களை எழுதுக.

$$\frac{3}{7} = \frac{\square}{14} = \frac{18}{\square}$$

46. கீழே தரப்பட்டுள்ள விலைப்பட்டியலை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| பொருட்கள் | விலை | |
|---|---|---|
| | ரூ. | சதம் |
| சீனி 1kg | 58 | 00 |
| உருளைக்கிழங்கு 1kg | 75 | 00 |
| சிவப்புப் பருப்பு 500g | 52 | 00 |
| வெங்காயம் 250g | 18 | 50 |
| பாசிப்பயறு 1kg | 83 | 50 |
| கடலை 500g | 84 | 00 |

(1) 1kg 250g சீனி வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?
..........................

(2) 2kg 250g சிவப்புப் பருப்பு வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?..........................

(3) முரளி 1kg 750g கடலையை வாங்கி கடைக்காரனுக்கு ரூபாய் 500.00 பணத்தைக் கொடுத்தான். கடைக்காரன் அவனுக்கு மீதியாக கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?

47. நிசாட் 07:45 மணித்தியாலத்திற்கு பாடங்களைப் படிக்கத் தொடங்கி, 3 மணித்தியாலம் 45 நிமிடங்களுக்குப் பின்னர் நிறுத்தினார். நிசாட் பாடங்களைப் படித்து முடித்த நேரம் யாது?..........................

48. பின்வரும் பந்தியை வாசிக்க.

வயோதிபர் ஒருவர் தள்ளாடியபடி நடந்து வருகின்றார். அவர் வீதியைக் கடக்க முற்படுகின்றார். தூரத்தில் ஒரு வாகனம் வேகமாக வந்துகொண்டிருக்கின்றது. வீதியோரத்தில் சற்றுத் தொலைவில் ஒரு சிறுவன் வந்துகொண்டிருக்கின்றான்..........................

இதனைத் தொடர்ந்து நடந்தவற்றை விவரித்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்)

1. ..........................
..........................
2. ..........................
..........................
3. ..........................
..........................
4. ..........................
..........................
5. ..........................
..........................
6. ..........................
..........................

## வினாத்தாள் II இன் விடைகள்

*(பெப்ரவரி 16, 23 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

01. (i) றோசாப் பூ (ii) சிவப்பு, வெள்ளை
(iii) அன்பு, கருணை, நேசம் (iv) முட்கள்
(v) சின்னச் சின்ன, வண்ண வண்ண (vi) வட்டமான
(vii) இரையும் (viii) பள பள
(ix) காலை நேரம் (x) இதழ்கள் விரித்து சிரிக்கின்றன

02. (i) சீடன் தனது குருவிடம் சென்று நடந்தவற்றைக் கூறினான்.
(ii) தாத்தாவும் பேரனும் திகைத்துப்போய் அசையாமல் சிறிது நேரம் நின்றனர்.

03. (i) உதவி செய்தல்
(ii) கொடுத்த வாக்கை மீறுதல்/ பொய் சொல்லுதல்/ பேச்சுறுதி தவறுதல்

04. (i) தீர்க்கதரிசி (ii) ஒத்திகை

05. (i) சவர்க்காரம் (ii) இகழ்ச்சி

06. (i) Butterfly (ii) Sun flower (iii) Scissor

07. (i) இரவு வணக்கம் (ii) தயவுசெய்து உள்ளே வாருங்கள்
(iii) உங்கள் பெயர் என்ன?

08. உங்கள் அப்பாவின் பெயர் என்ன? எனது அப்பாவின் பெயர் நிமல்.

| | | | | |
|---|---|---|---|---|
| 09. 2 | 10. 3 | 11. 3 | 12. 4 | 13. 2 |
| 14. 1 | 15. 2 | 16. 2 | 17. 3 | 18. 3 |
| 19. 2 | 20. 3 | 21.3 | 22. 4 | 23. 2 |
| 24. 2 | 25. 1 | 26. 2 | 27. 1 | 28. 1 |
| 29. 3 | 30. 4 | 31. 6 | 32. 5 | 33. தாளம் |
| 34. மரக்காஸ் | 35. வயலின் | 36. கொம்பு | 37.2801 38.774 | 39. 180 |
| 40. 7l150ml | 41. 7 | 42. 22cm | 43. (1) 7,6 | (2) 6,3 |
| 44. 3m 25cm | 45. 6,42 | 46. (1) 72.50 | (2) 236.25 | (3) ரூபாய் 206.00 |

47. 11.30 மணித்தியாலம்

48. எழுவாய், பயனிலையுடன் ஆறு வாக்கியங்கள் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புச்சக்திக்கே எதிர்ப்பைக் காட்டும் பக்றீரியா

## இந்தியாவில் கண்டுபிடிப்பு

எத்தகைய மருந்தாலும் கட்டுப்படுத்த முடியாததும் எதிர்ப்புச்சக்தியைக்கூட எதிர்க்கும் சக்திகொண்ட புதிய-பயங்கரமான ஒருவகை பக்றீரியா இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


பக்றீரியா குறித்த ஆராய்ச்சி

குறித்த பக்றீரியா தற்போது பிரித்தானியாவில் பரவியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதுமட்டுமன்றி, இன்னும் சிறிது காலத்தில் இந்தப் பயங்கர பக்றீரியா உலகம் முழுவதும் பரவுவதற்கு வாய்ப்பிருப்பதாக பிரித்தானிய மருத்துவ ஆய்வுக்குழு தனது அச்சத்தை வெளியிட்டுள்ளது.

### முதன்முதலாக இந்தியாவில்...

இந்த பக்றீரியா முதன்முதலாக இனங்காணப்பட்டது கடந்த வருடத்திலாகும். காடி பல்கலைக்கழகத்தின் நுண்ணிய உயிரியல் விஞ்ஞான மேதையாகிய திமோத்தி வோல்ஷ் என்பவரே இதனைக் கண்டுபிடித்தார். இந்தியாவின் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட ஸ்வீடன் நாட்டு நோயாளி ஒருவரின் உடலில் இருந்தே இத்தகைய கொடிய பக்றீரியா கண்டுபிடிக்கப்பட்டது. இந்த பக்றீரியாவிற்கு 'நியு டெல்லி மெட்டேலோ பீடா லெக்டமேஸ் 1' அல்லது 'என்.டி.எம்.1' (NDM1) என பெயர் இடப்பட்டுள்ளது.

இந்த பக்றீரியாவானது, நுரையீரலுக்கண்மையில் நோயை உருவாக்கும் நியூமோனியா மற்றும் சிறுநீர் சம்பந்தமான நோயை உருவாக்கும் எஸ்ச்சேரிசியா கோலாய் எனும் இரண்டு பக்றீரியா இனங்களினதும் ஒருவகைக் கூட்டு பக்றீரியாவாகும் என திமோத்தி வோல்ஷ் குறிப்பிடுகின்றார்.

### பிரித்தானியாவில் பரவியமை

என்.டி.எம் 1 பக்றீரியாவை எத்தகைய மருந்தாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. அது நோய் எதிர்ப்புச் சக்திகொண்ட மருந்தைக்கூட எதிர்க்கக் கூடியது. இதற்குக் காரணம், நோய் எதிர்ப்புச்சக்தியானது, அதற்கு நன்கு பழக்கப்பட்ட ஒரு விடயமாக இருப்பதாகும் என பிரித்தானிய மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். குறைந்த செலவில் உடலை மெருகுபடுத்தும் சிகிச்சையை மேற்கொள்வதற்காக இந்தியாவிற்குச் சென்று, மீண்டும் தாயகம் திரும்பிய பிரித்தானிய பெண்மணி மூலமே இந்தக் கொடிய பக்றீரியா பிரித்தானியாவிற்குள் பரவியதாகக் கருதப்படுகின்றது.

பல்வேறு நாட்டினர்கள் உடல் மெருகூட்டும் சிகிச்சைக்காக இந்தியாவிற்கு வருகை தருவதால், 'என்.டி.எம் 1'


என்.டி.எம். 1 பக்றீரியாவின் நுணுக்குக்காட்டித் தோற்றம்



பக்றீரியாக்கள் உலகம் முழுவதும் பரவும் ஆபத்துக்கள் இருப்பதாக மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த பக்றீரியாவினால் பாதிக்கப்பட்டு அதற்கான நோய் அறிகுறிகளைக்கொண்ட 37 நோயாளிகள் இதுவரை பிரித்தானியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

### இந்தப் பக்றீரியாவைத் தோற்கடிக்க முடியுமா?

தென் இந்தியாவின் சென்னை நகரில் இந்த பக்றீரியாவினால் சுகயீனமுற்ற 44 பேரும் இந்தியாவின் ஹரியானாவில் 26 நோயாளிகளும் இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. தவிர, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலும்கூட இந்த பக்றீரியாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் இருப்பது இனங்காணப்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. என்.டி.எம். 1 பக்றீரியாவால் கடும் சுகயீனமுற்றவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் அவர்கள் இறக்க நேரிடலாம் எனவும் தற்போது, நமது கைவசமுள்ள நோய் எதிர்ப்புச்சக்தி மருந்தின்மூலம் இந்த பக்றீரியாவைத் தோற்கடிக்க முடியாது எனவும் திமோத்தி வோல்ஷ் தெரிவித்துள்ளார்.

(-அ)

# ஆரோக்கியமான உடலில் கிருமிகள் தொற்றாது!

**மனிதன் உட்பட, சகல உயிரினங்களுக்கும் நோய் தொற்றுவதற்கு கிருமிகள் காரணமாக அமைகின்றன. இந்தக் கிருமித் தொற்றினால் சிலவேளைகளில் உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன. எனவேதான், நுண்ணங்கிகள் பரவாது தடுக்கும் வகையில் சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்கவேண்டியதன் அவசியம் பற்றி பொதுமக்களுக்கு அன்றாடம் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.**



### ஆரோக்கியமும் கிருமித்தொற்றும்



பொதுவாக, நுண்ணங்கி என்றாலே அது நோயை ஏற்படுத்தக்கூடியது என்றே கருதுகின்றோம். ஆனால், அதில் முழுமையான உண்மையில்லை என்பதை மருத்துவ விஞ்ஞானியான பெட்டன் கோபர் (1892) நிரூபித்திருக்கிறார். இதற்காக, கொலராவை உண்டாக்கும் கிருமிகளை சிறிய குழாய் ஒன்றினுள் எடுத்து அனைவர் முன்னிலையிலும் அதனை வாயினுள் போட்டு பெட்டன் விழுங்கினார். இதனைக் கண்டவர்கள் திகைத்துப் போனார்கள். ஆனால், பெட்டன் அந்தக் கிருமித்தொற்றுக்கு ஆளாகவில்லை. அதனை அடுத்து, ஆரோக்கியமான உடம்பில் எந்தவித நோய்க்கிருமிகள் நுழைந்தாலும் அதனால், நோய் உண்டாகாது என்பதை அவர் நிரூபித்தார்.

### நோய்க்கிருமிகள் பரவும் விதம்


- காற்றில் கலத்தல்.
- நீரில் கரைதல்.
- உணவில் சேர்தல்.
- ஈ, நுளம்பு, நாய், மாடு, பன்றி மற்றும் குரங்கு போன்ற உயிரினங்கள் ஊடாகவும் நோய்க்கிருமிகள் மனிதனை வந்தடைகின்றன.



### நன்மை பயக்கும் நுண்ணங்கி

நுண்ணங்கிகளில் நோயை உண்டாக்கக்கூடியவை இருப்பது போலவே, நன்மை செய்யும் நுண்ணங்கிகளும் இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் 'பக்றீரியா'. அந்தவகையில், பக்றீரியாவின் பயன்பாடுகள் பற்றி நோக்குவோம்.

இது பாலை உறைய வைத்துத் தயிராக்கவும் யோகட் தயாரிப்பிலும் உதவுகின்றது. நாம் உண்ணும் உணவை சமிபாடு அடையச் செய்வதற்காக நீரைச் சுரக்கின்றது. பக்றீரியாக்கள் இல்லாவிட்டால், உணவுகள் சமிபாடடையாமல் போய்விடும். அத்துடன், காய்கறிகளில் காணப்படும் 'செலுலோஸ்' எனப்படுகின்ற நார்ச்சத்தினை புளிக்கச் செய்வதும் இவ்வகையான நுண்ணங்கிகள்தான். தவிர, விபத்துக்களின்போது ஏற்படும் குருதிப் பெருக்கைத் தடைசெய்து, குருதியை உறைய வைக்கக்கூடியது. அவ்வாறு உறையாதபட்சத்தில் மரணம் ஏற்படவும் வாய்ப்புள்ளது. மேலும், விற்றமின் K எனப்படும் ஊட்டச்சத்தை எந்தச் சுரப்பிகளாலும் உருவாக்க முடியாது. ஆனால், இந்த நுண்ணங்கிகள்தான் அந்த அற்புத வேலையையும் செய்கின்றன.



நாம் உணவாகக் கொள்ளும் தோசை, இட்லி போன்றவற்றுக்கான மாவை புளிக்க வைக்கவும் பீட்ரூட் கிழங்கிலுள்ள இனிப்புச்சாற்றை மதுவாக மாற்ற நைதரசன் உப்பை மண்ணில் உருவாக்கி தாவரங்களுக்கு உயிரளிப்பதும் இந்தப் பக்றீரியாக்களே ஆகும். தவிர, மேலும் பல்வேறுவிதமான நன்மைகளை அவை செய்து கொண்டுதான் இருக்கின்றன.

(ஊ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேரத்தைக் கணிக்கு

**எமது அன்றாட வாழ்க்கையில் நாம் மேற்கொள்ள வேண்டிய செயல்களோ ஏராளம். எனினும், நாளொன்றில் உள்ள இருபத்தி நான்கு மணித்தியாலங்களில் அந்த அனைத்துக் காரியங்களையும் செவ்வனே முடிக்கவும் ஓய்வினை பெறவும் எமக்கு அவகாசம் தேவைப்படுகிறது. அதனால், நேரத்தை சரியாக அளந்து முறையாகப் பயன்படுத்த வேண்டிய தேவை எழுகின்றது**

அதன்படி, காலத்தை அளந்துகொள்ள வேண்டிய தேவை ஆதிகாலத்தில் இருந்தே மனிதர்களிடத்தில் இருந்து வந்துள்ளது. எனினும், அதற்கென உரிய உபகரணம் ஒன்றைத் தயாரிக்கும் அளவிற்கு ஆதிமனிதன் முன்னேறியிருக்கவில்லை. எனினும்; சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு படைப்புகளையும் மரம், இலை, மலர் போன்றவற்றைப் பயன்படுத்தியும் விலங்குகளின் நடமாடும் முறையை அனுமானித்தும் நேரத்தைக் கணிக்கக்கூடிய அறிவு ஆதிமனிதனிடம் இயல்பாகவே ஏற்பட்டது.

அன்று இவ்வாறாக நேரம் குறித்து ஏதோ ஒருவகை அனுமானத்தைப் பெற்ற மனிதன், இன்று மிகத் துல்லியமாக நேரத்தைக் காட்டக்கூடிய அணு கடிகாரத்தைக்கூட தயாரிக்கத் தொடங்கிவிட்டான். அந்தவகையில், இதுவரை காலமும் நேரத்தை அளக்க மனிதன் 5,000 இற்கும் மேற்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தியுள்ளான்.

அதன்படி, நாளுக்கு நாள் காலத்தைக் கழித்து வந்த மனிதனுக்கு இன்றுவரை நேரத்தை முகாமைத்துவப்படுத்தித் தமது கடமைகளைச் செய்ய வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கமைய, அன்று முதல் இன்று வரை நேரக்கணிப்பு இயந்திர வளர்ச்சியில் கடந்து வந்த முக்கிய மைல் கற்களைப் பார்ப்போம்.

பரபரப்பான மனித வாழ்க்கைக்கு நேர முகாமைத்துவம் மிக அவசியம் என்பது மனிதனுக்கு நன்கு புலப்பட்டது. இயற்கையை மதிப்பீடு செய்யும்பொழுது நேரத்தை அறிந்துகொள்வதில் ஏற்படும் பல்வேறு பாதிப்புகளால் மனிதன் வேறு மாற்றுவழிகளைக் கண்டுபிடிக்க முற்பட்டான். அந்தப் படிமுறை முயற்சியின் விளைவாகவே 'கடிகாரம்' எனும் நேரத்தைக் காட்டும் கருவி கண்டுபிடிக்கப்பட்டு வளர்ச்சி அடைந்தது

## தன் நிழலின் நீளம்



எமது மூதாதையர்கள் பகல் பொழுதில் (சூரியன் உதித்து மறையும் வரை உள்ள காலம்) தமது நிழலின் நீளத்தைக்கொண்டு நேரத்தை அறிந்துகொண்டனர். தமது நிழலின் தலைப்பகுதி தமது பாதங்களில் தெரிந்தால் அது நண்பகல் பன்னிரெண்டு மணி என அவர்கள் கணித்தனர்.

## தாவரங்களில் பூக்கள் மலரும் நேரம்



அந்திமந்தாரை மலரும் நேரம்(பிற்பகல் 4.00 மணி), பீர்க்கங்காய் பூ மலரும் நேரம் (மாலை 5.00, அல்லது 5.30) என பலவகை பூக்கள் பூக்கும் நேரத்தைக்கொண்டு முன்னோர்கள் காலத்தைக் கணித்துள்ளனர்.

## பலாவின் காம்பு தெரியும் நேரம்



இரவு நேரம் இருள் சூழ்ந்து விடுவதால் மரம், செடி, கொடிகள் தெளிவாக எமது கண்களுக்குப் புலப்படுவதில்லை. சற்று இருள் விலகி ஒளிவீச ஆரம்பிக்கும் வேளை (அதிகாலை 5.30 மணியளவில்) மரம், இலை, குழைகளை ஓரளவு காணக் கூடியதாக இருக்கும். பின்னர், சிறிது சிறிதாக அனைத்தும் தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கும். இதனையே 'பலாக் காம்பு தெரியும் நேரம்' என அழைப்பர்.

## சேவல் கூவும் நேரம்




காணான் கோழி, நாட்டுச் சேவல்கள் கூவுவதை அல்லது சத்தமிடுவதை (அதிகாலை 4.30 மணியளவில்) கேட்டுக் கிராமத்தவர்கள் அதிகாலையில் துயில் எழும்புவர். அந்தவகையில், ஒவ்வொரு மணித்தியாலத்திற்கொரு முறையும் சேவல் கூவும். இன்றும் அனுபவம் வாய்ந்த கிராமத்தவர்கள் சேவல் கூவுவதைக்கேட்டு சரியாக நேரத்தைக் கூறுவதில் வல்லவர்களாக உள்ளனர்.

## சந்திவெளிச்ச அல்லது அந்திக்கருக்கல் நேரம்




சந்திவெளிச்ச நேரம் என்பது மாடுகளை மாட்டுத் தொழுவத்திற்கு ஓட்டிச் செல்லும் நேரத்தை குறிக்கும். மாலை 6.00 மணி முதல் 6.30 மணி வரையிலான நேரத்தை 'சந்திவெளிச்ச நேரம்' அல்லது 'அந்திக்கருக்கல்' நேரம் என்பர்.

## கோல் நிழலின் நீளம்



பிற்காலத்தில் மனிதனுக்குக் காலத்தைக் கணிப்பதன் தேவை மிக முக்கியமாகப்பட்டது.வெறுந்தரையில் கோல் ஒன்றை ஊன்றி அந்தக் கோலின் நிழல் எவ்வாறு அமைகிறதோ, அதன் அடிப்படையில் நேரத்தை அறிந்துகொண்டான்.


## திபெத் நேரத் தூண் (மணித்தூண்)




இந்த மணித்தூணில் உள்ள சிறிய துவாரத்தில் சிறிய- ஒடுங்கிய தடி அல்லது கம்பி செருகப்பட்டிருக்கும். அதன் நிழலின் நீளத்தைக் கொண்டு திபெத் மக்கள் நேரத்தைக் கணித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம் கருவியின் கதை



## மர்க்ஹர்ட்



மர்க்ஹர்ட் எனும் புராதன எகிப்திய மக்கள் காலத்தைக் கணிப்பதற்கு மேற்குறித்த சாதனத்தைப் பயன்படுத்தியுள்ளனர். இரவுநேரத்தில் வானில் தோன்றும் விண்மீன்கள் அமைந்துள்ள நிலையைக்கொண்டு இந்த உபகரணத்தைப் பயன்படுத்திக் காலத்தைக் கணித்துள்ளனர்.

## சூரியத்தட்டு




கி.மு 2600 ஆம் ஆண்டளவில் சூரியத்தட்டினைத் தயாரிப்பதில் சீனர்கள் வெற்றி பெற்றனர். கி.மு 900 ஆம் ஆண்டளவில் சூரியத்தட்டு நேரத்தை சரியாகக் காட்டும் கருவியாக வளர்ச்சியடைந்திருந்தது. பெபிலோனியர்கள் 'மெரிடியானா' என சூரியத் தட்டினை அழைத்தனர். இது வட்டவடிவமான தட்டாகும். இத்தட்டின் மத்தியில் செங்குத்தாகவும் மட்டமாகவும் 2 தடிகள் ஊன்றப்பட்டிருக்கும். இந்த இரு தடிகளுக்கும் இடையில் உள்ள துணியில் நிழல் மாற்றமடையும் விதத்தைக்கொண்டு நேரத்தைக் கணிப்பர். ஆரம்பகாலத்தில் சூரியத்தட்டிற்கு அதிக அளவான இடம் தேவைப்பட்டாலும் பிற்காலத்தில் சூரியத்தட்டு கைகளில் எடுத்துச்செல்லக்கூடிய அளவிற்கு சிறிய கையடக்க சூரியத்தட்டாக மாறியது.

## நீர்க்கடிகாரம்




கி.மு 1400 ஆம் ஆண்டளவில் எகிப்திய மக்கள் நீர்க்கடிகாரத்தைப் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இந்த நீர்க்கடிகாரத்தின் இரு பகுதிகளிலும் வட்டவடிவமான இரு அமைப்புகள் இருக்கும். சிறிய துவாரம் வழியாக ஒரு பக்கத்தின் அடியிலிருந்து மறுபக்கத்தின் அடிக்கு நீர் செல்ல எடுக்கும் நேரத்தைக்கொண்டு காலத்தைக் கணித்தனர்.

## மெழுகுவர்த்திக் கடிகாரம்




கி.மு 890 இல் நேரத்தை அறிந்து கொள்ள மெழுகுவர்த்திக் கடிகாரம் பயன்படுத்தப்பட்டது. ஒரு மெழுகுவர்த்தி முழுமையாக எரிய எடுக்கும் காலத்தை சமனான பிரிவுகளாகப் பிரித்து அதனை மெழுகுவர்த்தியில் அடையாளப்படுத்தி மெழுகுவர்த்திக் கடிகாரத்தை அமைத்திருந்தனர். அதன்படி, அந்தந்த அடையாளங்களைத் தாண்டி (1/2 மணிநேரம், 1 மணிநேரம்) மெழுகுவர்த்தி எரிந்து செல்லும்போது, நேரத்தை கணித்துக்கொண்டனர்.

## மணித்தட்டு




மணித்தட்டும் முன்பு கூறியது போன்றதொரு நீர்க்கடிகாரமேயாகும். இங்கு ஓரளவு பெரிய வட்டவடிவ பாத்திரமொன்றில் நீர் நிரப்பப்பட்டிருக்கும். அதன் மேல் துவாரமிடப்பட்ட சிறிய வட்டவடிவ பாத்திரம் வைக்கப்பட்டிருக்கும். அதிலுள்ள துவாரம் ஊடாக, நீர் உள்ளே வந்து சிறிய பாத்திரமானது, அந்த நீரில் முழுமையாக மூழ்க எடுக்கும் காலம் ஒரு மணித்தியாலமாகும். இவ்வாறு மணித்தியாலத்தில் நீரில் மூழ்கிய பின், அதிலுள்ள நீரைப் பெரிய பாத்திரத்தில் இட்டு மீண்டும் முன்னரைப் போலவே வைப்பர்.

## மணல் கடிகாரம்




இதில் ஒரு பக்கத்தின் அடியில் உள்ள மணல், சிறிய துவாரம் வழியாக மறுபுறம் செல்ல எடுக்கும் நேரம் ஒரு மணித்தியாலமாகும். ஒரு பக்கமுள்ள மணல் முழுமையாக மறுபுறம் கீழே விழுந்தபின் மீண்டும் அதனை மற்றப் பக்கமாகத் திருப்பிக்கொள்ளலாம்.

## Foliot கட்டமைப்பு (தொகுதி)




இயற்கையில் கிடைக்கும் பல்வேறு பொருட்களையும் உயிரினங்களையும் பயன்படுத்தி நேரத்தை அறியும்பொழுது சிற்சில அனுபவங்களை மனிதன் படிப்படியாக அறிந்து கொண்டான். மிகவும் துல்லியமாக சரியான நேரத்தைக் கணிப்பிடுவதில் கி.பி 1300 அளவில் மனிதன் வெற்றி பெற்றான். இதற்காக இயந்திர உபகரணமொன்றை நேரக் கணிப்பிற்காக உருவாக்கினான். தொங்கும் பொருள் திணிவொன்றின் மீது அந்த இயந்திரத்தை இயங்க வைத்தான். அதன் பலகை சரியான நேரத்தைக் காட்டியது. இது Foliot முறை என அழைக்கப்பட்டது.

## சீன தீக்கடிகாரம்



ஒரே அளவான இடைவெளிகளைக்கொண்ட அகலவாக்கிலான கோல்களை ஒன்றாகக் கட்டி அதிலிருந்து இரண்டு பிரிவுகளாக நூல்கள் கடிகாரத்தில் உள்ள பிடிமானத்தில் கட்டப்பட்டிருக்கும். அந்த நூல்கள் எரிய எடுக்கும் காலத்தைக் கொண்டு நேரத்தைக் கணிப்பர்.

## வேல்ஸ் தேவாலய கடிகாரம்



இது 14 ஆம் நூற்றாண்டில் மிகவும் புகழ் வாய்ந்த கடிகாரமாகும். வேல்ஸ் தேவாலயத்தின் வடக்குச் சிலுவை கோபுரத்தின் ஒரு பகுதியின் மேல் இந்தக் கடிகாரம் பொருத்தப்பட்டுள்ளது. இந்தக் கடிகாரத்தின் வெளிப்புறத்தில் வட்டவடிவத்தில் 24 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முகப்பிலுள்ள தங்கமுலாம் பூசப்பட்ட நட்சத்திரம் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கு ஒருதரம் அந்த அடையாளங்களில் ஒன்றின்மீது நிற்கும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல மனம்



சோலைக்கல் என்னும் சிற்றூரில் சோமு என்னும் சிறுவன் ஒருவன் தனது பெற்றோருடன் வாழ்ந்து வந்தான். அறிவும் ஆற்றலும் மிக்க அவன் இரக்க குணமும்உள்ளவன்.

ஒருநாள் சோமு பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது, வீதியோரத்தில் முதியவர் ஒருவர் மயக்கமுற்ற நிலையில் விழுந்திருப்பதைக் கண்டான். உடனே ஓடிச் சென்று நீர் தெளித்து அவரை எழுப்பி அருகில் உள்ள ஒரு மரத்தினருகே இருக்கச் செய்தான். அவரின் வாய் ''பசி, பசி'' என்று முணுமுணுப்பது சோமுவுக்குத் தெளிவாகக் கேட்டது.

அந்த நேரத்தில் அவனிடம் எந்த உணவும் இல்லை. உடனே, தான் வைத்திருந்த பணத்தில் அருகிலுள்ள சாப்பாட்டுக் கடையில் இருந்து உணவு வாங்கிக் கொடுத்தான். அவர் அதனை மிகுந்த ஆவலோடு சாப்பிட்டார். பின்னர் தன்னிடமிருந்த நீரையும் அவருக்குக் கொடுத்தான். சாப்பிட்டு முடித்தவர் நீரை மடமடவெனக் குடித்தார். பின்னர், ''தம்பி! பல பெரிய மனிதர்கள் நான் மயக்கமுற்றிருப்பதைக் கண்டு உதவி செய்யாமலேயே சென்றுவிட்டனர். ஆனால், சிறிய பையனான நீ மட்டுமே எனக்கு உதவி செய்தாய். உனக்கு மிக்க நன்றி'' என்று கூறினார். ''மனிதனுக்கு மனிதன் உதவுவதுதானே பண்பு தாத்தா. சரி பாடசாலைக்கு நேரமாகிவிட்டது. நான் வருகிறேன்'' என்று கூறிச் சென்றான்.

பாடசாலைக்குச் சென்றதும் ஆசிரியர் ''ஏன் இவ்வளவு தாமதம்?'' எனக் கேட்டார். அவனும் நடந்த சம்வத்தைக் கூறினான். அவனைப் பாராட்டிய ஆசிரியர், ''நீங்களும் சோமுவைப் போல் நல்ல நடத்தைகளைப் பின்பற்றி, ஏனையவர்களுக்கு உதவி செய்துவாழ வேண்டும்'' எனக் கூறினார்.

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.

# லியனார்டோ டாவின்சி



லியனார்டோ டாவின்சி 1452 ஆம் ஆண்டு இத்தாலியில் புளோரன்ஸ் எனும் நகரில் பிறந்தார். புளோரன்ஸ் நகரின் பிரசித்தி பெற்ற ஓவியரான வெரோக்கியோவின்கீழ் அவர் ஓவியக்கலையைப் பயின்றார். பின்னர் புளோரன்ஸ் நகரில் கலையகம் அமைத்து, அங்கு புகழ் பெற்ற ஓவியராகி மக்களின் மதிப்பிற்குள்ளானார்.

ஓவியத்தில் அன்றும் இன்றும் இவரது புகழை எடுத்துக் காட்டும் ஓவியமாக 'இயேசுவின் இறுதி இராப்போசனம்' என்ற ஓவியம் விளங்குகின்றது. மிலானில் உள்ள புதிய மரியாள் கன்னியர் இல்லத்தின் சுவர் முழுவதும் அவரது இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது.



அவரது புகழ் வாய்ந்த மற்றைய ஓவியம் 'மோனா லிசா' ஆகும். தாய்மையின் அன்பையும் இரக்கத்தையும் அது வெளிப்படுத்துகிறது. தற்போது அந்த ஓவியம் பிரான்ஸில்'லூவர்' தொல்பொருள் நிலையத்தில் உள்ளது. அத்துடன், இயற்கையை வெளிப்படுத்தும் ஓவியங்களை வரைவதற்கு முயன்ற அவர்,அதன் பொருட்டுப் பற்பல முறைகளையும் கையாண்டார்.

எம்.ஏ.சிலானா,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.



# இயற்கை தந்த செல்வம் நீர்



இயற்கை தந்த செல்வங்களில் ஒன்று நீர். பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தும் நீரைப் பேணிப்பாதுகாப்பது நம் தலையாய கடமையாகும். இந்த நீர்வளமானது பல்வேறு செயற்பாடுகளால் மாசடைந்து வருகின்றது. இந்த நிகழ்வானது மனித வாழ்க்கைக்கு மட்டுமன்றி, உயிரினங்களுக்கும் சுற்றாடலுக்கும் பாரிய அச்சுறுத்தலாகவே அமைகின்றது. மாசடைந்த நீரைப் பயன்படுத்துவதால் அல்லது பருகுவதால் நமது உடல் ஆரோக்கியம் கெட்டு ஆயுளும் குறுகியதாகிவிடும். எனவே, நாம் சுத்தமான நீரையே பயன்படுத்த வேண்டும். நீரின் அருமையை நன்குணர்ந்து அதனை அளவோடு பயன்படுத்த வேண்டும். எதிர்கால சந்ததியினருக்கு இப்பெரும் செல்வத்தைப் பாதுகாத்துக் கொடுத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவது நமது பொறுப்பு என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

எம்.ஆர்.எஃப்.றிப்கா,
கா/உஸ்வதுன் ஹஸனா ம.வித்.,
கட்டுகொடை, காலி.

## எனது பாடசாலை

முல்லைத்தீவு மாவட்டத்தில் திருமுறிகண்டி என்னும் அழகிய கிராமத்தில் எனது பாடசாலையான திருமுறிகண்டி இந்து வித்தியாலயம் அமைந்துள்ளது. இது ஒரு சைவப் பாடசாலையாகும். இங்கு தரம் - 1 முதல் தரம் 11 வரை வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் இங்கு கல்வி கற்கின்றனர். எமது அதிபரின் வழிகாட்டலின்கீழ் 26 ஆசிரியர்கள் கற்பித்தல் கடமைகளைச் சிறப்புறவே செய்து வருகின்றனர். இவர்களின் வழிகாட்டலில் எனது பாடசாலையில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களின் வாழ்வும் வளம்பெற வேண்டுமென்பதே எனது பிரார்த்தனையாகும்.

நா.சுஜீபா,
திருமுறிகண்டி இந்து வித்.,
முல்லைத்தீவு.

# கணினியின் பயன்



கொம்யூட்டர் என்னும் கணினி மனிதனின் அத்தியாவசியப் பொருளாக அமைந்துவிட்டது. அலுவலகமாக இருந்தாலும் சரி ஆராய்ச்சிக்கூடங்களாக இருந்தாலும் சரி பள்ளிகள் கல்லூரிகள் என அனைத்து இடங்களிலும் கணினியின் பங்களிப்பு மிக முக்கியமாகிவிட்டது. 'இன்டர்நெட்' அறிமுகத்திற்கு வந்த பின்னர் தற்போது இதன் தேவை பன்மடங்காகப் பெருகிவிட்டது.

எனினும், கணினியை ஆங்கிலம் தெரிந்தவர்கள் மட்டுமே பயன்படுத்த முடியும் என சிலர் கருதுகின்றனர். ஆனால், கணினி மொழியானது எல்லைகளைத் தாண்டி உலகின் அனைத்து பாகங்களில் வாழும் மக்களுக்குப் பயனளித்துக் கொண்டிருக்கிறது

இணையத்தில் தமிழ் பேசும் மக்களுக்கான பக்கங்கள் ஏராளமாக இருக்கின்றன. வீட்டில் இருந்து வேலை செய்து பணம் உழைக்கவும்கூட பல திட்டங்கள் இன்டர்நெட்டில் காணப்படுகின்றன.



ஆகவே, கணினியைப் பயனுள்ள வகையில் உபயோகித்துப் பயன்பெறுவோம்.

டீ.கிஷோம்,
தரம் - 8[F], இந்துக் கல்லூரி,
கொழும்பு-04.

## தம்பி, தங்கைகளே!

'விஜய்' வாசகர்களான தம்பி தங்கைகளே..

மாணவர் ஆக்கங்கள் 'பகுதிக்கு உங்களிடமிருந்து கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன வரவேற்கப்படுகின்றன. பலர் இப்பகுதிக்கு வேறு பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்த விடயங்களையே பார்த்து எழுதி அனுப்புகின்றனர். இவ்வாறு செய்வதால் நீங்கள் சுயமாக சிந்தித்து எழுதும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். நீங்களே சுயமாக சிந்தித்து ஆக்கங்களை எழுதி அனுப்ப முயற்சி செய்யுங்கள். அவ்வாறு நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் தரமானவையாக இருந்தால் தவறுகள் இருப்பினும் திருத்திப் பிரசுரிக்கப்படும்.



அனுப்ப வேண்டிய முகவரி:

மாணவர் ஆக்கங்கள்
'விஜய்'
08.ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி.,
கொழும்பு -02.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரத்தைக் கணிக்கும் கருவியின் கதை

(12, 13ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஆரம்ப மேசைக் கடிகாரம்



இது கி.பி 1500 ஆம் ஆண்டு காலகட்டத்திற்குரியது. நேரத்தை அறிந்துகொள்ள சக்தியை பயன்படுத்தும் நவீன எண்ணக்கருவியை கட்டியெழுப்புவதில் இந்தக் கடிகாரம் வெற்றி கண்டது. எனினும், இந்த முறையில் நேரம் மிகச் சரியாக கணிக்கப்படுகின்றது எனக் கூறமுடியாது. இதிலுள்ள 'வில்' போன்ற அமைப்பில் வலு களஞ்சியப்படுத்தப்பட்டாலும் அதிலுள்ள சக்தி மிக விரைவாக வெளியேற்றப்படுவதே நேரக் கணிப்பின் குறைபாட்டிற்கு காரணமாகும். களஞ்சியப்படுத்திய சக்தி வெளியேற்றப்படும் போது நேரத்தைக் காட்டும் முள்ளின் அசைவு வேகமும் அதிகரிப்பதால் நேரத்தை சரியாகக் காட்டுவதில் குறைபாடுகள் நிலவியது.

## திருத்தி அமைக்கப்பட்ட மேசைக் கடிகாரம்



கி.பி 1560 இல் மேற்குறிப்பிட்டுள்ள தொழில்நுட்பம் மென்மேலும் அபிவிருத்தியடைந்து மற்றுமொரு மேசைக்கடிகாரம் தயாரிக்கப்பட்டது. பர்த்தலோமியு நுசாமி என்பவரே இதனை தயாரித்தார். அலங்காரமான இந்தக் கடிகாரம் அளவில் சிறிய மேசைக்கடிகாரமாகும்.

-இரஞ்சித் ஜெயகர்

# நாயிடமிருந்து பயிலவேண்டிய சில நல்ல பண்புகள்

மனித நாகரிகத்தின் ஆரம்பம் நதிக்கரையோரக் குடியிருப்புகளுடன் ஆரம்பமாகின்றது என வரலாறு கூறுகிறது. மனிதன் நதிக்கரையில் குடியிருப்புகளை ஆரம்பிக்க முன்னதாகவே வேடுவர் யுகத்தில் வாழ்ந்த மனிதர்கள் நாய்களையும் தம்முடன் இணைத்து வளர்த்துக் கொண்டதாகவும் அறியமுடிகிறது.

மனிதர்கள் பண்டைய காலத்திலிருந்தே நாயை நல்ல வேலைக்காரனாகவும் உற்ற நண்பனாகவும் வீட்டின் காவல்காரனாகவும் பேணி வளர்த்து வருகின்றனர். ஆனாலும், நாயிடமிருந்து நாம் கற்கவேண்டிய பாடங்கள் நிறையவே உண்டு.









**✱ பணிவும் உண்மை விசுவாசமும்:** நாய் தன் எஜமான் யார்? அவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யார்? என்பவற்றை நன்கு தெரிந்து கொள்கிறது. அது மட்டுமன்றி, தன்னிடம் யாரெல்லாம் அன்பாகப் பழகுகிறார்கள்? என்பவற்றையும் அறிந்து அவர்களுக்குப் பணிவாகவும் உண்மையான விசுவாசத்துடனும் நடந்து கொள்கிறது. இதன் உயரிய குணத்தைப் பார்த்து நாமும் நம் உறவுகளுடன் உண்மையான விசுவாசத்துடனும் பணிவுடனும் பழகிக்கொள்ளலாமல்லவா!

**✱ உறவினர் நண்பர்களை மகிழ்வுடன் உபசரித்தல்:** தனது எஜமானுக்கு விசுவாசமானவரும் தனது நன்மதிப்பிற்குரியவரும் வீட்டுக்கு வருகை தரும் போது அகமகிழ்ந்து, வாலை ஆட்டி, பூரிப்படைந்து அன்போடு உபசரிக்கும் அரிய பண்பை நாய்கள் கொண்டுள்ளன. இப்பண்பையும் நாம் இவற்றிடமிருந்து கற்றுக்கொள்ள முடியுமல்லவா?

**✱ திட்டினாலும் அடித்தாலும் மீண்டும் மீண்டும் அன்பைக் காட்டிப் பாசத்தைப் பெற முயலுதல்:**

எஜமான் நாய் செய்த தவறுக்கு அடித்தாலும் திட்டினாலும் மீண்டும் மீண்டும் தன் அன்பைக் காட்டி எஜமானின் பாசத்தைப் பெற்றுக்கொள்ளும். இதன்மூலம் பிறரின் மீது அன்பைக் காட்டி அவர்தம் பாசத்தைப் பெறக்கூடிய உயர் மனப்பாங்கை நாய்கள் நமக்குக் கற்றுத் தருகின்றன.

**✱ போலியான கோபத்தை வெளிக்காட்டல்:**

நாயானது சின்னச்சின்ன விடயங்களுக்கெல்லாம் கோபப்படாமல் சற்றே போலியான கோபத்தை வெளிக்காட்டும். உண்மையில் சிறிய விடயங்களுக்கெல்லாம் நாய் கோபப்படுவதில்லை. அது கோபப்படுவது போல் பாசாங்கு செய்கிறது. இவ்வாறான செயல்மூலம் பல்வேறு செயற்பாடுகளையும் வெற்றி கொள்ள முடியுமல்லவா?

**✱ ஆறுதல் அளித்தல்:** தன் எஜமான் சோகத்தில் ஆழ்ந்திருப்பதை நாய் தன் உணர்வின்மூலம் அறிந்து கொள்ளக் கூடியது. தன் எஜமான் சோகமாக இருக்கும் போது அவர் அருகிலிருந்து அவருக்கு ஆறுதல் தரும் செயற்பாடுகளில் ஈடுபடும். அதாவது, வாலை ஆட்டி, நாவினால் நக்கி, உடலால் உரஞ்சி அன்பாக ஒலி எழுப்பி அவரின் மனநிலையை வேறுபக்கம் திருப்பி விடும் செயற்பாடுகளில் ஈடுபடும்.

**✱ தனிமையை விரும்புதல்:** தனிமையிலேயே நாய்கள் தூங்க விரும்புகின்றன. தனது தனிமையில் பிறர் தலையிடுவதை அவை அனுமதிப்பதில்லை. தனிமையிலே இனிமை காணும் பண்பை நாயிடமிருந்து நாமும் கற்றுக்கொள்ளலாம்!

**✱ சிறுதூக்கம் கொள்ளல்:** நாய்கள் காலம், செயற்பாடு அனைத்தையும் நன்கு அனுசரித்து சிறு தூக்கம் கொள்ளும் இயல்பைக் கொண்டுள்ளன. அது மட்டுமன்றி, தூங்கி எழுந்தவுடன் கால்களை மடக்கி, நீட்டி, உடலை தூக்கச் சோம்பலிலிருந்து மீட்டும் துடிப்புடன் செயற்படும்.

**✱ உணவை மகிழ்வுடன் உண்ணல்:** கிடைக்கும் உணவை ரசித்து, ருசித்து உண்டு மகிழ்வது நாய்களிடம் நாம் காணக்கூடிய மற்றுமொரு சிறப்பாகும்.

**✱ வெளியில் சுற்றிவர விரும்புதல்:** உலாவுவதற்கு எஜமான் செல்கையில் அவருடன் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அது அதனைத் தவறவிடுவதில்லை.

**✱ வெப்பமான காலத்தில் உடலை சீராக்கு உத்திகள்:** வெயில் அதிகமான நாட்களில் நாய்கள் அதிக நீரைப் பருகி தமது உடல்நிலையைச் சீராக்கும். இதேபோல் இக்காலங்களில் வெளிக்காற்றை நன்கு சுவாசித்து உடல் உஷ்ணத்தைத் தவிர்ப்பதையும் காணலாம்.

**✱ ஓடி விளையாடல்:** நாய்கள் ஓடி விளையாடி மகிழ்வதில் அலாதிப் பிரியமுடையவை அதிலும்தான் விளையாடி தன் எஜமானை மகிழ்விப்பதில் அவை காட்டும் அக்கறையும் வியக்கத்தக்கது.

இவ்வாறாக நல்ல உயரிய பண்புகளை வெளிக்காட்டும் நாயிடமிருந்து மேற்படி பண்புகளை நாமும் கற்று எமது வாழ்வை வளப்படுத்த முடியுமல்லவா!

ப.அருந்தவம்

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 4005

ம.றக்ஷா, தரம் - 3, நறுவிலிக்குளம் அ.த.க.பாட., மன்னார்.



அங்.இல: 4006

எம்.ஹிஸாம்டீன், தரம் - 3, கே.பி.ரத்நாயக்க வித்., அனுராதபுரம்.



அங்.இல: 4007

முஹம்மத் இன்சாப், தரம் - 3, ஹமீதியா மு.ம.வித்., குருணாகல்.



அங்.இல: 4008

எஃப்.நஃப்ரிதா, தரம் - $4^{B}$, மீரா பாலிகா மு.வித்., மட்டக்களப்பு.



அங்.இல: 4009

க.நாகலெச்சுமி, தரம் - 5, விவேகானந்தாக் கல்., கொழும்பு.



அங்.இல: 4010

எம்.இமாத், தரம் - $5^{A}$, அல்-அஸ்ஹர் வித்., கல்முனை.



அங்.இல: 4011

பா.வினோஜா, தரம் - $9^{D}$, சாவகச்சேரி இந்து. கல்., சாவகச்சேரி.



அங்.இல: 4012

இ.சாந்தினி, தரம் - $11^{A}$, கனகபுரம் ம.வித்., கிளிநொச்சி.



அங்.இல: 4013

எம்.இன்பாஸ், தரம் - $10^{C}$, டீ.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு-07.



அங்.இல: 4014

ஜித்மா மரியம், தரம் - $11^{B}$, மஹ்மூத் பெ.கல்., சாய்ந்தமருது.



அங்.இல: 4015

மு.அனித்தா, உயர் தரம், கிளிநொச்சி ம.வித்., கிளிநொச்சி.



அங்.இல: 4016

ம.தனுசன், உயர் தரம், பட்டித்திடல் ம.வித்., திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்முனை ஹனிபா தனியார் கல்லூரியின் ஆங்கில தினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவின்போது, கல்முனை சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.ஸாலிஹ், மாணவரொருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் அருகில் கல்லூரி அதிபர் என்.எம்.நௌசாத் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(தகவல்: நிப்றாஸ் மன்சூர் - கல்முனை)*

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



இறத்தோட்டையைச் சேர்ந்த ரில்வான்-பெறோஜ் தம்பதியரின் செல்வப் புதல்வன் ஆக்கில் அஹமட், 13.02.2011 அன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.



தெல்தோட்டையைச் சேர்ந்த விஸ்வநாதன்-மல்லிகா தம்பதியரின் செல்வப் புதல்வி வி.அபிலக்ஷனா, 14.02.2011 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் இறைவனின் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: தெய்வராஜ்)

## ஓவியம் வரைவோம் - 38

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூப்

**இப்பாடத்திலும் ஒரு காட்சியை வரைந்து பயிற்சி பெறுவோம். இதுவும் மனித செயற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டுள்ளது.**

**மனித உருவங்களை வரையும்போது, நாம் ஏற்கனவே படித்த பாடங்களை மனதில்கொள்வது சிறந்தது.**

### விளையாடும் சிறுவர்கள்


✱ படம் A இற்கமைய, அடிப்படை ரேகைகளை வரைந்துகொள்வோம்.

✱ நாம் வரைந்த அடிப்படை ரேகைகளைக்கொண்டு, படம் B இல் காட்டப்பட்டுள்ளவாறு விளையாடும் மாணவர்களின் உருவங்களை வரைவோம்.

✱ உங்கள் கற்பனைக்கேற்ப பின்னணியையும் சரியான முறையில் வரைந்துகொள்ளுங்கள்.

✱ உருவங்கள் சிறந்த கருத்து வெளிப்பாட்டை பிரதிபலிப்பதாக அமையும்படி பார்த்துக்கொள்ளவும்.

படம் - A





படம் - B

## கைவண்ணங்கள்






ர.எடின் டிலுசன், தரம் - 3C, ஸ்ரீ கோணேஸ்வரா இ.கல்., திருகோணமலை.




கே.சார்ல்ஸ், தரம் - 9A, கதிரேசன் மத்.கல்., நாவலப்பிட்டி.




சுரேந்தினி, தரம் - 7A, சென்.மேரிஸ் மத்.கல்.,ஹட்டன்.



கே.திலீபன், தரம் - 11T, சென்.சில்வெஸ்டர் கல்., கண்டி.



ஆர்.ஜக்ஷல்யா, தரம் - 9B, புனித கப்ரியல் ம.கல்., ஹட்டன்.



எம்.எம்.முனீரா, தரம் - 8, ஹமீதியா மு.ம.வித்., குருநாகல்.



ஏ.ரஹ்மான், தரம் - 7D, ஸாஹிரா கல்., கம்பளை.



எம்.எச்.ஹஸீமா, பாலர் வகுப்பு, தாருல் ஹிக்மா பாலர் பாட., வெருங்குளம்.



எம்.ருஸைக், தரம் - 6A, குருத்தல மு.ம.வித்., குருத்தலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை உதவி

வினோத் பாடசாலை முடிந்து சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். அப்போது, "தம்பி...தம்பி" என்று யாரோ அழைக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். தலையில் காய் கறிக்கூடை ஒன்றை ஏந்திய படி முதியவர் ஒருவர் அங்கு நின்று கொண்டிருந்தார்.

"தம்பி இந்தக் கூடையை என்னால் தூக்கிவர முடியவில்லை. உன்னுடைய சைக்கிளில் வைத்து பஸ் நிறுத்தம் வரைக்கும் கொண்டு வந்து தருவியாப்பா? உனக்கு பத்து ரூபா தருகிறேன்!" என்று வினோத்திடம் கேட்டார் முதியவர்.

தன் தந்தை பெரிய அரசாங்க அதிகாரி. தினமும் தன்னுடைய கைச்செலவிற்கே ஐம்பது ரூபா தருகிறார். இந்த முதியவர் பத்து ரூபா தருவதை ரொம்பப் பெருமையாகச் சொல்கிறாரே! என்று நினைத்த வினோத்திற்கு சிரிப்புத்தான் வந்தது.

முதியவரின் தலையிலிருந்த அழுக்கு காய்கறிக் கூடையை சைக்கிளில் வைத்துச் சென்றால் என் மரியாதை என்ன ஆகும்? என்று நினைத்த வினோத், "இல்லைத் தாத்தா, நான் அந்த பஸ் நிறுத்தம் வழியாகப் போகவில்லை. வேறு வழியாகப் போகிறேன்" என்று பொய் சொன்னான்.


"பரவாயில்லை தம்பி, நீ போ" என்று அவர் சொன்னதுதான் தாமதம், வினோத் தனது சைக்கிளை வேகமாக மிதித்தான். அவன் வீட்டிற்கு வந்தபோது, வீடு பூட்டிக்கிடந்தது. வேறுவழியின்றி வாசலிலேயே அமர்ந்திருந்தான்.

அரைமணி நேரம் கழித்து ஆட்டோ ஒன்று வீட்டருகில் வந்து நின்றது. வினோத்தின் அம்மா தான் ஆட்டோவிலிருந்து இறங்கினார். தன் அம்மாவோடு மூதாட்டி ஒருவரும் இறங்கி வருவதைக் கவனித்தான் அவன். அழுக்குச் சேலையும், கையில் ஓர் அழுக்குக் கூடையுமாக இருந்த அந்த மூதாட்டி அருகில் வந்ததும் அவர் யாரென்று புரிந்தது. அவர் இந்தத் தெரு வழியாக கீரை விற்றுச் செல்லும் பாட்டி. அம்மா எதற்காக இந்தப் பாட்டியை வீட்டிற்கு அழைத்து வருகிறார்? என்று வினோத் நினைத்தான்.

கதவைத் திறந்து வீட்டிற்குச் சென்றதும் வினோத்தின் அம்மா அந்தப் பாட்டிக்கு குளிர்பானத்தோடு, சில பலகாரங்களையும் உண்ணக்கொடுத்தார். வினோத்திற்கு, அம்மாவின் செய்கை பிடிக்கவில்லை. சிறிது நேரத்தில் பாட்டி சென்றதும், "எதுக்காக அந்தப் பாட்டியை வீட்டிற்குள் அழைத்துவந்து பலகாரம் எல்லாம் கொடுத்து அனுப்புறீங்க?" என்று கேட்டான்.

"அவங்க மட்டும் இல்லேன்னா, இன்னிக்கு நான் வீடு வந்து சேர்ந்திருக்க மாட்டேன். மதியம் மார்க்கெட்டுக்குப் போயிருந்தப்ப, ரோட்டைக் கடக்கும்போது, கால் தடுக்கி மயக்கம் போட்டு கீழே விழுந்துட்டேன். நல்ல வேளை, அந்தப்பக்கமாக இந்த அம்மா வந்தாங்க. என்னை அடையாளம் கண்டுபிடிச்சு, உடனே ஒரு ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனாங்க. இல்லேன்னா, என்னோட நகை, பணத்தையெல்லாம் யாராவது திருடிகிட்டுப் போயிருப்பாங்க. தேவையான நேரத்தில் உதவி செய்தவங்களை வீட்டுக்குக் கூப்பிட்டு உபசரிக்கலைன்னா எப்படி?" என்றார் அவர்.

உடனே அவன் மதியம் நடந்தவற்றை அம்மாவிடம் கூறினான். "வினோத், அந்தத் தாத்தா தருவதாகச் சொன்ன பத்து ரூபா உனக்கு சிறியதாகத் தோன்றியது. உனக்கு அது தேவையில்லை என்றால் பணமே பெற்றுக்கொள்ளாமல் அவருக்கு உதவி செய்திருக்க வேண்டும். அவரது அழுக்குக்கூடையை சுமந்து வருவது உனக்கு மரியாதைக் குறைவானது என்று நீ நினைத்தது தவறு. ஏழைகளும் நம்மைப் போன்ற மனிதர்கள்தானே?! உதவி மனப்பான்மை என்பது ஏழை-பணக்காரர்கள் என்ற வித்தியாசமின்றி ஏற்பட வேண்டும். நான் வசதியானவள் என்று நினைத்து இந்தப் பாட்டி உதவி செய்ய மறுத்திருந்தால் என்ன ஆகியிருக்கும் சொல்? இயலாத நிலையில் இருப்பவர்களுக்கு இயன்றவர்கள் உதவி செய்ய வேண்டும். அதுதான் உண்மையான உதவி" என்ற அம்மாவிடம், "இனிமேல் எல்லோருக்கும் என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன் அம்மா" என்று மகிழ்ச்சியோடு கூறினான் வினோத்.






அரியாலையூர் சி.சிவதாசன்

*ஒரு கிராமத்தையே நடுநடுங்க வைக்கும் அந்தப் பயங்கரப் பேயை ஒழித்துக்கட்டி வேப்பங்கேணிக் கிராமமக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்விற்கு ஒளிவிளக்கு ஏற்றப்போகும் தமது பணி வெற்றியடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டவர்களாக அந்த இளைஞர்கள் இருவரும் காணப்பட்டனர்*

## அந்தக் கரிய உருவம்

வித்தியாபரனின் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. உடனே அவன் திருக்குமாரிடம், "காற்று நம் பக்கம் வீசுகின்றது. அப்பாவும் அம்மாவும் தற்போது வீட்டில் இல்லை. நாம் பயமின்றி எமது . வேலையை ஆரம்பிக்கலாம். வா! சீக்கிரம் வீட்டிற்குப் போவோம்" எனக் கூறினான். இருவரும் வீடு நோக்கிப் புறப்பட்டார்கள். பசி அவர்களை வாட்டியது. வீட்டுக்குள் நுழைந்த இருவரும் நன்றாகச் சாப்பிட்டார்கள். பின்னர் மிக ரகசியமாகப் பேய் வேட்டைக்குத் தயாராகினர். வித்தியாபரன் தனது தந்தையின் அறைக்குச் சென்று அவரின் அலுமாரியில் இருந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டான்.

திருக்குமாரின் திட்டப்படி, சுருக்குப்போட்ட நீண்ட தேடாக் கயிறு, கத்தி, ரோச்லைட் இவையெல்லாவற்றையும் எடுத்துத் தனது அறையில் மறைத்து வைத்தான். ஒரு கிராமத்தையே நடுநடுங்க வைக்கும் அந்தப் பயங்கரப் பேயை ஒழித்துக்கட்டி வேப்பங்கேணிக் கிராமமக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்விற்கு ஒளிவிளக்கு ஏற்றப்போகும் தமது பணி வெற்றியடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டவர்களாக அந்த இளைஞர்கள் இருவரும் காணப்பட்டனர்.


மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

வேப்பங்கேணிக் கிராமமே இருளில் மூழ்கியது. எந்தப் பகுதியிலும் மக்கள் நடமாட்டம் காணப்படவில்லை. அங்குள்ள வீடுகளிலும் வெளிச்சத்தைக் காணமுடியவில்லை. பயங்கரமான ஓர் அமைதி அக்கிராமம் எங்கும் நிலவியது. நாய்கள் குரைக்கும் சத்தம் மட்டும் இடையிடையே கேட்டது. பகல் முழுவதும் துயில் கொண்ட வெளவால்கள் மட்டும் இரைதேடி வானவெளியில் பறந்தன. வானத்தில் நட்சத்திரங்களும் அதன் நடுவே சந்திரனும் அரை வட்டவடிவில் ஒளியைக் கொடுத்துக் கொண்டிருந்தன. இளைஞர்களான திருக்குமாரும், வித்தியாபரனும் அந்த இருளில் பயங்கரமான ஒரு புதிய போராட்டத்தை எதிர்நோக்க ஆயத்தமானார்கள்.

திருக்குமாரின் கைகளில் தேடாக்கயிறும் டோச்சும் கூரிய கத்தியும் இருந்தன. வித்தியாபரனின் கையில் துப்பாக்கியும் தோட்டாக்குண்டுகள் அடங்கிய பையும் இருந்தன. மாணிக்கம்பிள்ளையும் மனைவியும் கிராமத்தில் இல்லாதது வித்தியாபரனுக்கும் திருக்குமாருக்கும் நல்ல வாய்ப்பாகவே இருந்தது. நடுநிசி நேரம், மெல்ல மெல்ல மாடிப்படி வழியாகக் கீழே இறங்கிய இருவரும் வீட்டின் முன்புறமாக உள்ள மதிலால் ஏறிப் பாய்ந்து வீட்டின்முன்பாக உள்ள பாதைக்கு வந்தார்கள்.பயங்கரமாக அமைந்த அந்த அமைதி அவர்களுக்கு சாதகமாகவே இருந்தது. மிக விரைவாகப் பாதையோரம் நடந்து நாலாபுறமும் நன்கு அவதானித்து வேப்பங்கேணிக் கிராமப்புற எல்லையிலுள்ள பேய் உலவுவதாகக் கூறப்படும் வேப்ப மரத்தடிப் பகுதியை நோக்கி மிக எச்சரிக்கையுடன் முன்னேறினர். அப்பகுதி மிகவும் அமைதியாகவே காணப்பட்டது.

இருவரும் தம்மைத் தயார்படுத்த மறைவிடம் ஒன்றைத் தேடினார்கள். வேப்பமரங்களைத் தவிர வேறு மறைவிடங்கள் அங்கு தென்படவில்லை.

பாரிய வேப்பமரம் ஒன்றின் பின்னால் இருவரும் மறைந்து கொண்டனர். வித்தியாபரன் கையில் உள்ள தனது துப்பாக்கியில் தோட்டக்களை நிரப்பிக்கொண்டான். சிறிது நேரத்துக்குப் பின்னர் வயல்வெளியூடாக கறுத்த உருவம் ஒன்று பாதையைக் கடந்து வேப்பமரத்தை நோக்கி வருவதை அவர்கள் கண்டார்கள். குறிப்பிட்ட வேப்பமரத்தடியை நெருங்கிய அந்த உருவம் திரும்பித்திரும்பி நாலாபக்கமும் பார்ப்பது நன்கு தெரிந்தது. தலைப்பகுதி முதல் கால்பகுதி வரை அடையாளம் காணமுடியாதவாறு கருமையாகவே இருந்த அந்த உருவத்தைக்கண்ட வித்தியாபரன் தனது துப்பாக்கியால் அந்தப் பயங்கர உருவத்தை நோக்கிச் சுட ஆயத்தமானான்.



அதனைக் கண்ட திருக்குமார் அவன் கைகளைப் பற்றி அவசரப்படாதே, என மெல்லக் கூறித் தடுத்தான். இதனால்; வித்தியாபரனுக்கு மிகுந்த ஆத்திரமே ஏற்பட்டது. கண்கள் கோபக்கனலைக் கக்கின. அவனுடைய வலது கரம் திருக்குமாரின் கன்னத்தைப் பதம் பார்த்தது. திருக்குமார் ஒருகணம் நிலைகுலைந்து போனான். எனினும், தனது கன்னத்தைத் தடவியவாறே ஒருவாறு அவன் நிதானம் அடைந்தான். "வித்தியாபரா! ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பது உன் விடயத்தில் சரியாகத்தான் இருக்கிறது. நான் சொல்வதைக் கேள். தயவுசெய்து கொஞ்சம் பொறு" என்றான் மிக நிதானமாக.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் நாம் 'எங்கள் ஊர்' பற்றிய ஒரு சிறு கட்டுரையைப் பார்ப்போம்

### අපේ ගම

1. අපේ ගම යාපනයයි.
2. යාපනය උතුරු පළාතේ පිහිටා තිබේ.
3. යාපනයේ වැසියෝ ගොවිතැන් කර ජීවත් වෙති.
4. මෙහි රජයේ රැකියා කරන අය ද සිටිති.
5. යාපනයේ බොහෝ කෝවිල් ඇත.
6. මෙහි බොහෝ තල් ගස් දක්නට ඇත.

### அபே கம

1. அபே கம யாபணயய்.
2. யாபணய உதுறு பளாதே பிஹிடா திபே.
3. யாபணயே வெசியோ கொவிதென் கற ஜீவத்வெதி.
4. மெஹி ரஜயே ரெகியா கறன அயத சிடிதி.
5. யாபணயே பொஹோ கோவில் எத.
6. மெஹி பொஹோ தல் கஸ் தக்னட எத.

### எங்கள் ஊர்

1. எங்கள் ஊர் யாழ்ப்பாணம்.
2. யாழ்ப்பாணம் வட மாகாணத்தில் அமைந்துள்ளது.
3. யாழ்ப்பாண மக்கள் விவசாயம் செய்து வாழ்கின்றனர்.
4. இங்கு அரசாங்க உத்தியோகம் செய்கிறவர்களும் இருக்கின்றார்கள்.
5. யாழ்ப்பாணத்தில் ஏராளமான கோயில்கள் இருக்கின்றன.
6. இங்கே பனை மரங்கள் அதிகம் காணப்படுகின்றன.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. யாழ்ப்பாணம் வட மாகாணத்தில் அமைந்துள்ளது.
..............................................................................

ii. யாழ்ப்பாணத்தில் கோயில்கள் இருக்கின்றன.
..............................................................................

iii. யாழ்ப்பாண மக்கள் விவசாயம் செய்து வாழ்கிறார்கள்.
..............................................................................



**இடைவெளிகளை நிரப்புக**

1. අපේ ගම..............................................................
2. .............................................. කර ජීවත් වෙති.
3. රජයේ .................................... කරන අය ද සිටිති.
4. මෙහි බොහෝ ..............................................ඇත.




'Were' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லை (Past Tense Auxiliary Verb) தனியொரு வினைச்சொல்லாகக் கையாண்டு அமைக்கப்பட்ட இறந்தகால தனி வாக்கியங்களையும் (Past Simple Tense) அவ்வாறே, 'were' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லை நிகழ்கால எச்சவினையுடன் (Present Participle) கையாண்டு அமைக்கப்பட்ட இறந்தகால தொடர் வாக்கியங்களையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) நேற்று அவர்கள் வீட்டில் இருந்தனர்.
Yesterday they were at home.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) நேற்று இரவு அவர்கள் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு இருந்தனர்.
Yesterday night they were watching Tv.
(இறந்தகால தொடர் வாக்கியம் - Past Continuous Tense)

✱ அவர்கள் இருந்தனர்.
They were.

✱ அவர்கள் பார்த்துக்கொண்டு இருந்தனர்.
They were watching.

(இ) நேற்று அந்தச் சிறுவர்கள் வகுப்பில் இருந்தனர்.
Yesterday the children were in the class.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஈ) நேற்றுப் பிற்பகல் அந்தச் சிறுவர்கள் படித்துக்கொண்டு இருந்தனர்.
Yesterday afternoon the children were studying.
(இறந்தகால தொடர் வாக்கியம் - Past Continuous Tense)

✱ அந்தச் சிறுவர்கள் இருந்தனர்.
The children were.

✱ அந்தச் சிறுவர்கள் படித்துக்கொண்டு இருந்தனர்.
The children were studying.

(உ) அந்த ஆண் பிள்ளைகள் ஆற்றங்கரையில் இருந்தன.
The boys were at the river bank.
(இறந்தகால தனிவாக்கியம் - Past Simple Tense)

(ஊ) அந்த ஆண் பிள்ளைகள் ஆற்றில் நீந்திக்கொண்டு இருந்தன.
The boys were swimming in the river.
(இறந்தகால தொடர் வாக்கியம் - Past Continuous Tense)

✱ அந்த ஆண் பிள்ளைகள் இருந்தன.
The boys were.

✱ அந்த ஆண் பிள்ளைகள் நீந்திக்கொண்டு இருந்தன.
The boys were swimming.

(எ) நேற்று அந்தப் பறவைகள் கூரையின் மேல் இருந்தன.
Yesterday the birds were on the roof.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஏ) நேற்று மாலை அந்தப் பறவைகள் பறந்துகொண்டு இருந்தன.
Yesterday evening the birds were flying.
(இறந்தகால தொடர் வாக்கியம் - Past Continuous Tense)

✱ அந்தப் பறவைகள் இருந்தன.
The birds were.

✱ அந்தப் பறவைகள் பறந்துகொண்டு இருந்தன.
The birds were flying.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்து ஜனாதிபதி பதவி விலகினார்

## மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்



எகிப்து நாட்டில் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கிற்கு எதிராக பதினெட்டு நாட்களாக நடைபெற்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தின் காரணமாக,ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் தனது பதவியிலிருந்து விலகியதையடுத்து மக்கள் வீதிகளில் இறங்கி மகிழ்ச்சி ஆரவாரம் செய்துள்ளனர்.

முபாரக்கின் பதவி விலகலை துணை ஜனாதிபதி ஓமர் சுலைமான் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

கடந்த முப்பது வருடகாலமாக எகிப்தை ஆட்சி செய்த முபாரக் சர்வாதிகார ஆட்சியை நடத்தி வந்ததையடுத்தே அவருக்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.



அதுமட்டுமன்றி, அதிகார துஷ்பிரயோகம், ஊழல், குடும்ப ஆட்சி, விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு உயர்வு போன்ற பல குற்றச்சாட்டுக்களை முபாரக்கின் ஆட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் முன் வைத்திருந்தனர். இந்த ஆர்ப்பட்டத்தின் போது 100 இற்கும் மேற்பட்டோர் மரணமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. மக்களின் ஆர்ப்பட்டத்திற்கு இராணுவமும் ஒத்துழைப்பு வழங்கியதுடன், அமெரிக்காவும் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கை ஆதரிக்காமையால் மாற்று வழியின்றி அவர் பதவி துறக்க வேண்டிய நிலைக்கு ஆளாகினார்.

தற்போது அவர் தலைநகர் கெய்ரோவிலிருந்து குடும்பத்தினருடன் வெளியேறி சார்ம் எல் ஹெய்க் என்ற இடத்தில் உள்ள மாளிகையொன்றில் தஞ்சமடைந்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தெரிந்து கொள்வோம்



- பொலன்னறுவை ஆட்சிக்காலத்தில் இலங்கைத் தீவு முழுவதையும் ஒரு குடையின்கீழ்க் கொண்டு வந்த அரசன் யார்?

**முதலாம் மகா பராக்கிரமபாகு**

- பின்வரும் புனைபெயர்களுக்குரிய தமிழ் அறிஞர்கள் யார்?



1. **கவியரசு கண்ணதாசன்**
2. **தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர்**
3. **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்**
4. **பேரறிஞர் அண்ணாத்துரை**
5. **தமிழ் தென்றல் கல்யாண சுந்தரனார்**

- சக்கரத்தை முதலில் கண்டுபிடித்தவர்கள் யார்?

**பாரசீகர்கள்**

- இந்து சமுத்திரத்தில் எத்தனை சுனாமி எச்சரிக்கை நிலையங்கள் இயங்குகின்றன?



**26 நிலையங்கள்**

- சிற்ப ஓவியக்கலை வரலாற்றில் ஏனைய காலங்களைவிட, கண்டிய ஆட்சிக்காலத்தில் வேறுபட்ட பல அம்சங்கள் காணப்படுகின்றன. இக்காலத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ள இந்திய சிற்ப முறைகள் எவை?

**பாண்டிய, ஆந்திர, விஜய நகர சிற்ப முறைகள்**



- மனித உடலில் வியர்க்காத பகுதி எது?

**உதடு**

- கோள்களில் ஏனைய கோள்களுக்கு எதிராக சுற்றும் கோள் எது?



**யுரேனஸ்**



- நள்ளிரவில் சூரியன் தெரியும் நாடு எது?

**நோர்வே**

- உலகில் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ ஆர்.டி.பண்டார நாயக்க.



இலங்கையின் முதல் பெண் ஜனாதிபதி யார்?


**சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க**



- பசுபிக் சமுத்திரத்தையும் அட்லாண்டிக் சமுத்திரத்தையும் இணைக்க, மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட பனாமாக் கால்வாயின் நீளம் யாது?

**50 மைல் (80கி.மீ)**

- 'தாஸ் கபிடல்' என்ற நூலின் ஆசிரியர் யார்?



**கால் மாக்ஸ்**

- முதன்முதலில் முத்திரை பாவிக்கும் முறையை அறிமுகப்படுத்தியவர் யார்? இந்த முறை எந்த ஆண்டில் எந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது?



**ரோலன்ஹில் எனப்படுபவரால் 1840 இங்கிலாந்தில்**

- மிக்கிமவுஸ்-கேலிச்சித்திர சுண்டெலியின் எத்தனையாவது பிறந்த தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது?



**81 ஆவது பிறந்த தினம்**

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**






## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

## ஒபாமாவின் பிள்ளைகளுக்கு '.:.பேஸ்புக்' தடை



அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமாவின் இரண்டு மகள்மாரையும் '.:.பேஸ்புக்' உறுப்பினர்களாவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்று ஒபாமாவின் பாரியார் மிஷெல் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள மிஷெல் ஒபாமா, "சிறு பிள்ளைகளுக்கு '.:.பேஸ் புக்' பாவனயானது பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை" என்று பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

ஒபாமா தம்பதியரின் புதல்வியரில் ஒருவருக்கு வயது பன்னிரெண்டு, மற்றையவருக்கு வயது ஒன்பது என்பது குறிப்பிடத்தக்கது.

## வடகொரியா-தென்கொரியா பேச்சுக்கள் தோல்வி



தென்கொரியாவுடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவதற்கு வடகொரியா மறுத்துள்ளது. கடந்த சில மாதங்களாக இரண்டு நாடுகளுக்கிடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தநிலையில், மீண்டும் சுமுக நிலையை ஏற்படுத்துமுகமாக, இரண்டு நாடுகளுக்குமிடையே கடந்த வாரம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருந்தன.



ஆனால், இந்தப் பேச்சுவார்த்தைகளில் தென்கொரியா நம்பகத்தன்மையுடன் நடந்து கொள்ளவில்லை என்று வடகொரியா குற்றஞ்சுமத்தியுள்ளது. இதனால், பேச்சுக்களிலிருந்து இடைநடுவில் வடகொரியா வெளியேறியது.

எனினும், இப்பேச்சுக்களில் வடகொரியாவே நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்று தென்கொரியா பதிலுக்குக் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தப் பின்னணியில் தென்கொரியா மீது மீண்டும் வடகொரியா தாக்குதல்களை நடத்தக்கூடிய ஏதுநிலை இருப்பதாக கருதப்படுகின்றது. பேச்சுவார்த்தைகளில் எந்த விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற விடயத்திலேயே இரண்டு தரப்பினருக்குமிடையே கருத்துபேதம் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

## அற்லஸ் கேள்வி - 296

**கேள்வி:** எகிப்து ஜனாதிபதிக்கு எதிராக எத்தனை நாட்களாக மக்கள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது?

**சரியான விடை..........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 296,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 294 இன் சரியான விடை: 30 வருடங்கள்**

**பரிசு பெறுவோர்**

சாருஜா மகேஸ்வரன்,
227, நாவலர் வீதி, பண்டாரிக்குளம், வவுனியா.

ஜி.கிரிஸ்டோபர்,
10/1, சென்.மேரிஸ் வீதி, கல்விட்டிய, வத்தளை.

எஃப்.அஃப்ரின்,
29/D, யுனிட்-01, பேராறு, கந்தளாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா-பாகிஸ்தான் இறுதிப் போட்டியில் போட்டியிட வேண்டும்

## -அஃப்ரிடி



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியா-பாகிஸ்தான் அணிகளே, இறுதிப் போட்டிக்குத் தெரிவாக வேண்டும் என்பதே தனது ஆசை என்று பாகிஸ்தான் அணியின் தலைவர் அஃப்ரிடி தெரிவித்துள்ளார்.

இதனால், இரண்டு அணிகளும்கூட ஒருவித ஆக்ரோஷத்துடனேயே விளையாடும் இது மிகுந்த பரபரப்பையும் ஏற்படுத்தும். அத்தகைய சூழலானது இறுதிப் போட்டிக்குத் தேவையான எதிர்பார்ப்புக்களை அதிகரிக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் நாடுகள் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் இருவேறு பிரிவுகளிலேயே உள்ளன. எனவே, அரையிறுதிப் போட்டியிலும்கூட இரண்டு அணிகளும் மோதக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படக்கூடாது என்பதே அஃப்ரிடியின் எதிர்பார்ப்பாகும்.

அரையிறுதியில் இரண்டு நாடுகளும் மோதவேண்டி ஏற்பட்டால் இரண்டில் ஒரு நாடே இறுதிப் போட்டிக்குச் செல்ல வேண்டிவரும்.

எனவே, இறுதிப் போட்டியில் இந்த இரண்டு நாடுகளும் மோத வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்து விடும்.எனவேதான் அரையிறுதி வரை இரண்டு நாடுகளும் மோதக்கூடாது என்று அஃப்ரிடி கூறுகின்றார்.

தான் எதிர்பார்ப்பது போலவே இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினால் இந்திய அணியை பாகிஸ்தான் வெற்றி கொள்ளும் என்ற நம்பிக்கையையும் அஃப்ரிடி வெளியிட்டுள்ளார்.

## போட்டி எண்ணிக்கை 2011 இல்....

**நடைபெறவுள்ள மொத்தப் போட்டிகள் 49**
**இலங்கையில் - 12 போட்டிகள்**
**இந்தியாவில் - 29 போட்டிகள்**
**பங்களாதேஷில் - 8 போட்டிகள்**



## உலகக் கிண்ணத்தை வென்ற நாடுகள்

*இம்முறை நடைபெறுவது 10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட்டி போட்டியாகும். அதன்படி, கடந்த 9 போட்டிகளில் கிண்ணத்தை வெற்றிகொண்ட நாடுகள் எவை தெரியுமா? அவை வருமாறு...*

| போட்டி | வருடம் | வெற்றி நாடு |
|---|---|---|
| 01 ஆவது | 1975 | மே.இ.தீவுகள் |
| 02 ஆவது | 1979 | மே.இ.தீவுகள் |
| 03 ஆவது | 1983 | இந்தியா |
| 04 ஆவது | 1987 | அவுஸ்திரேலியா |
| 05 ஆவது | 1992 | பாகிஸ்தான் |
| 06 ஆவது | 1996 | இலங்கை |
| 07 ஆவது | 1999 | அவுஸ்திரேலியா |
| 08 ஆவது | 2003 | அவுஸ்திரேலியா |
| 09 ஆவது | 2007 | அவுஸ்திரேலியா |
| 10 ஆவது | 2011 | ...........?............. |

## 'பாட்டா' வினா - 6 வெற்றி பெற்றவர்கள்...

Bata விஜய் B.first SCHOOL SHOES

* பி.எம்.இல்ஹாம், 41, கமதுரகம, பண்டாரவளை.
* என்.பாத்திமா கஹாதா, 431/2 புதுப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று-06.
* க.பிரபன், 69, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
* ஆர்.அஹமட் உமைர், 96, படகொல்லாதெனிய, கண்டி.
* எம்.மொஹம்மத் 45/6, கல்பொக்க வீதி, வெலிகம.
* மோ.லதுசன், கோரக்கர் வீதி, சம்மாந்துறை, அம்பாறை.
* எஃப்.ருஸ்கியா, B/53, பதுளுபிட்டிய, பதுளை.
* நபில் ஹசன், 28A, மஸ்ஜீத் வீதி, புத்தளம்.
* எம்.ஃபர்ஹான், அல்மனார், மண்டலகுடா, கல்பிந்தி, புத்தளம்.
* எஃப்.சாஜிதா, 88/F5, லபுகொட்டுவ, ஹுரிமலுவ, ரம்புக்கனை.

# உலகக் கிண்ண கால அட்டவணை



**A பிரிவு** அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து, இலங்கை, சிம்பாப்வே, கெனடா, கென்யா

**B பிரிவு** இந்தியா, தெ.ஆபிரிக்கா, இங்கிலாந்து, மே.இ.தீவுகள், பங்களாதேஷ், அயர்லாந்து, நெதர்லாந்து

| திகதி | போட்டி நாடுகள் | நடைபெறும் நாடு | வெற்றி | புள்ளி |
|---|---|---|---|---|
| 19.02.2011 | பங்களாதேஷ்/இந்தியா | பங்களாதேஷ் | ................ | ............. |
| 20.02.2011 | நியூஸிலாந்து/கென்யா | இந்தியா (சென்னை) | ................ | ............. |
| 20.02.2011 | இலங்கை/கெனடா | இலங்கை | ................ | ............. |
| 21.02.2011 | அவுஸ்திரேலியா/சிம்பாப்வே | இந்தியா | ................ | ............. |
| 22.02.2011 | இங்கிலாந்து/நெதர்லாந்து | இந்தியா | ................ | ............. |
| 23.02.2011 | பாகிஸ்தான்/கென்யா | இலங்கை | ................ | ............. |
| 24.02.2011 | தெ.ஆபிரிக்கா/மே.இ.தீவுகள் | இந்தியா | ................ | ............. |
| 25.02.2011 | அவுஸ்திரேலியா/நியூஸிலாந்து | இந்தியா | ................ | ............. |
| 25.02.2011 | பங்களாதேஷ்/அயர்லாந்து | பங்களாதேஷ் | ................ | ............. |
| 26.02.2011 | இலங்கை/பாகிஸ்தான் | இலங்கை | ................ | ............. |
| 27.02.2011 | இந்தியா/இங்கிலாந்து | இந்தியா | ................ | ............. |
| 28.02.2011 | மே.இ.தீவுகள்/நெதர்லாந்து | இந்தியா | ................ | ............. |
| 28.02.2011 | சிம்பாப்வே/கெனடா | இந்தியா | ................ | ............. |
| 01.03.2011 | இலங்கை/கென்யா | இலங்கை | ................ | ............. |
| 02.03.2011 | இங்கிலாந்து/அயர்லாந்து | இந்தியா | ................ | ............. |
| 03.03.2011 | தெ.ஆபிரிக்கா/நெதர்லாந்து | இந்தியா | ................ | ............. |
| 03.03.2011 | பாகிஸ்தான்/கெனடா | இலங்கை | ................ | ............. |
| 04.03.2011 | நியூஸிலாந்து/சிம்பாப்வே | இந்தியா | ................ | ............. |
| 04.03.2011 | பங்களாதேஷ்/மே.இ.தீவுகள் | பங்களாதேஷ் | ................ | ............. |
| 05.03.2011 | இலங்கை/அவுஸ்திரேலியா | இலங்கை | ................ | ............. |
| 06.03.2011 | இந்தியா/அயர்லாந்து | இந்தியா | ................ | ............. |
| 06.03.2011 | இங்கிலாந்து/தெ.ஆபிரிக்கா | இந்தியா | ................ | ............. |
| 07.03.2011 | கென்யா/கெனடா | இந்தியா | ................ | ............. |
| 08.03.2011 | பாகிஸ்தான்/நியூஸிலாந்து | இலங்கை | ................ | ............. |
| 09.03.2011 | இந்தியா/நெதர்லாந்து | இந்தியா | ................ | ............. |
| 10.03.2011 | இலங்கை/சிம்பாப்வே | இலங்கை | ................ | ............. |
| 11.03.2011 | மே.இ.தீவுகள்/அயர்லாந்து | இந்தியா | ................ | ............. |
| 11.03.2011 | பங்களாதேஷ்/இங்கிலாந்து | பங்களாதேஷ் | ................ | ............. |
| 12.03.2011 | இந்தியா/தெ.ஆபிரிக்கா - | இந்தியா | ................ | ............. |
| 13.03.2011 | நியூஸிலாந்து/கெனடா | இந்தியா | ................ | ............. |
| 13.03.2011 | அவுஸ்திரேலியா/கென்யா | இந்தியா | ................ | ............. |
| 14.03.2011 | பாகிஸ்தான்/சிம்பாப்வே | இலங்கை | ................ | ............. |
| 14.03.2011 | பங்களாதேஷ்/நெதர்லாந்து | பங்களாதேஷ் | ................ | ............. |
| 15.03.2011 | தெ.ஆபிரிக்கா/அயர்லாந்து | இந்தியா | ................ | ............. |
| 16.03.2011 | அவுஸ்திரேலியா/கெனடா | இந்தியா | ................ | ............. |
| 17.03.2011 | இங்கிலாந்து/மே.இ.தீவுகள் | இந்தியா | ................ | ............. |
| 18.03.2011 | இலங்கை/நியூஸிலாந்து | இந்தியா | ................ | ............. |
| 18.03.2011 | அயர்லாந்து/நெதர்லாந்து | இந்தியா | ................ | ............. |
| 19.03.2011 | அவுஸ்திரேலியா/பாகிஸ்தான் | இலங்கை | ................ | ............. |
| 19.03.2011 | பங்களாதேஷ்/தெ.ஆபிரிக்கா | பங்களாதேஷ் | ................ | ............. |
| 20.03.2011 | சிம்பாப்வே/கென்யா | இந்தியா | ................ | ............. |
| 20.03.2011 | இந்தியா/மே.இ.தீவுகள் | இந்தியா | ................ | ............. |
| 23.03.2011 | 1 ஆம் காலிறுதி ஆட்டம் (A-1/B-4) | பங்களாதேஷ் | ................ | ............. |
| 24.03.2011 | 2 ஆம் காலிறுதி ஆட்டம் (A-2/B-3) | இந்தியா | ................ | ............. |
| 25.03.2011 | 3 ஆம் காலிறுதி ஆட்டம் (A-3/B-2) | பங்களாதேஷ் | ................ | ............. |
| 26.03.2011 | 4 ஆம் காலிறுதி ஆட்டம் (A-4/B-1) | இலங்கை | ................ | ............. |
| 29.03.2011 | 1 ஆம் அரையிறுதி ஆட்டம் (வெற்றிC/வெற்றிE) | இலங்கை | ................ | ............. |
| 30.03.2011 | 2 ஆம் அரையிறுதி ஆட்டம் | இந்தியா (வெற்றிD/வெற்றிF) | ................ | ............. |
| 02.04.2011 | இறுதி ஆட்டம் | இந்தியா (அரையிறுதிகளில் வெற்றியீட்டிய அணிகள்) | ................ | ............. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்சத்திர மண்டலம் என்றால் என்ன?




பிரபஞ்சத்தில் பில்லியன் கணக்கிலான நட்சத்திர மண்டலங்கள் இருக்கின்றன. அவற்றில் நட்சத்திரக் கூட்டங்களும் வளிமண்டலமும் புழுதியும் அடங்கியுள்ளன. நட்சத்திர மண்டலங்களின் பிறப்பு பில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. அவை மெல்ல மெல்ல உருவாகி பல்வேறு தோற்றங்களைப் பெற்றன. நட்சத்திர மண்டலம் ஒன்று பில்லியன் கணக்கான நட்சத்திரங்களைத் தன்வசம் கொண்டுள்ளது



## நட்சத்திர மண்டலம் என்பது.....

இப்பிரபஞ்சத்தில் ஆயிரம் பில்லியனுக்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான நட்சத்திர மண்டங்கள் (Galaxy) இருக்கின்றன. நட்சத்திர மண்டலமொன்றில் பில்லியன் கணக்கிலான நட்சத்திரங்கள் காணப்படுகின்றன. அந்த நட்சத்திரங்கள் கொத்துக் கொத்தாகப் பரவி இருக்கும். நட்சத்திர மண்டல மொன்றில் நட்சத்திரங்களைத் தவிர, புழுதி மேகங்களும் வால்வெள்ளி களும் கிரகங்களும் காணப்படுகின்றன. மேலும், நாம் இனங்காண முடியாத பல வான் பொருட்களும் காணப்படுகின்றன. நட்சத்திர மண்டலமானது பல்வேறு வடிவங்களைக்கொண்டு அமைந்திருக்கும். அவற்றில் எமது சூரியனுக்கு உரித்தாகின்ற தொகுதி 'பால்வீதி' (Milky Way) என்று அழைக்கப்படுகின்றது. எமது நட்சத்திர மண்டலமானது சுருள் போன்ற தோற்றத்தைக்கொண்டிருக்கும். முற்காலத்தில் வாழ்ந்த விஞ்ஞானிகள் பிரபஞ்சத்தில் உள்ள ஒரே ஒரு நட்சத்திர மண்டலம் நாம் வாழும் பால்வீதி மாத்திரமே என நம்பினர். எனினும், இன்று நாம் அறிந்தவரையில் பிரபஞ்சத்தில் ஆயிரம் பில்லியனுக்கு மேற்பட்ட நட்சத்திர மண்டலங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## நட்சத்திரக் கொத்து

நட்சத்திர மண்டலத்தினுள் நட்சத்திரங்கள் கொத்துக் கொத்தாகவே அமைந்துள்ளன. இங்கு நட்சத்திரங்கள் ஒன்றுக்கொன்று மிகத் தூரத்தில் அமைந்திருந்தாலும், ஈர்ப்புச்சக்தி காரணமாக, அவை ஒன்றோடொன்று இணைந்த நிலையில் காணப்படுகின்றன. வானில் ஒன்றோடொன்று மிக நெருக்கமாக இருப்பதுபோல் இவை தோன்றினாலும், அந்த நட்சத்திரக் கூட்டங்கள் அமைந்திருப்பதோ, நாம் நினைத்தும் பார்க்க முடியாதளவு தூரத்திலாகும். கணிப்பிட முடியாதளவுக்கு அவற்றுக்கிடையிலான இடைவெளி உள்ளது. இதன் காரணமாக, நட்சத்திரங்கள் அமைந்துள்ள தூரத்தை ஒளி வருடங்களிலேயே கணிப்பர். புவியுடன் தொடர்புபடுத்தி இதனை அளக்கும்பொழுது, அதன் தூரம் ஆயிரக்கணக்கான அல்லது லட்சக்கணக்கான ஒளி ஆண்டுகளாக இருக்கும்.



## ஒளியாண்டுகள்

நட்சத்திர மண்டலம் மற்றும் நட்சத்திரங்களுக்கு இடையிலான தூரத்தை அளப் பதற்குரிய அளவுகோல்தான் ஒளி ஆண்டுகள். வருடமொன்றில் ஒளி பயணிக்கும் தூரத்தை வைத்தே ஒளியாண்டு கணிக்கப்படுகின்றது. அந்தவகையில், ஒரு விநாடியினுள் ஒளியானது 297,600 கி.மீற்றர் அதாவது 186,000 மைல் தூரம் பயணிக்கின்றது. அதன்படி, வருடமொன்றில் ஒளி எந்தளவு தூரத்தை சென்றடைகின்றதோ அதனை ஓர் அலகாக அதாவது, அதனை ஓர் ஒளிவருடமெனக் கணிப்பர்.

## சுருள் வடிவ நட்சத்திர மண்டலம்

இந்த வகையான நட்சத்திர மண்டலங்களில் உள்ள நட்சத்திரங்கள், புழுதி மற்றும் வளி நட்சத்திர மண்டலம் அனைத்தும் சுருள் வடிவில், குறித்த நட்சத்திர மண்டலத்தின் நடுப்பகுதியிலிருந்து பெருமளவு தூரத்திற்கு விரிந்து செல்கின்றது. இதில் அடங்கியுள்ள வளி மற்றும் தூசியின் அளவு, புதிதாக உருவாகும் நட்சத்திரங்களின் அளவு என்பன மிகவும் அதிகமாகும். இந்த நட்சத்திர மண்டலம் அதிக வெப்பத்துடன்கூடியதும் மிக இளமையானதுமான நட்சத்திரங்களைக் கொண்டிருப்பதனால், அது மிகப் பிரகாசமாக ஒளிவீசும். அத்துடன், நட்சத்திர மண்டலங்களிடையே நூற்றுக்கு இருபது சதவீதமானவை சுருள் நட்சத்திர மண்டல வகையைச் சார்ந்திருக்கும். நாம் வாழ்வதும் அத்தகைய சுருள் வடிவ நட்சத்திர மண்டலத்திலாகும்.


## நீள்வட்ட நட்சத்திர மண்டலம்

நீள்வட்டம் போன்ற தோற்றத்தைக்கொண்டு காணப்படுவதால் இதனை 'நீள் வட்ட நட்சத்திர மண்டலம்' என அழைக்கின்றனர். இத்தகைய, நட்சத்திர மண்ட லங்களில் பெரும்பான்மையாக இருப்பது பழைமை வாய்ந்த நட்சத்திரங்களாகும். இந்த நட்சத்திர மண்டலங்களில் வளிமண்டலம் மற்றும் தூசுகள் மிகக் குறைவாகவே உள்ளன. இங்கு புதிதாக நட்சத்திரங்கள் உருவாவதும் மிகக் குறைவு. எனவே, இந்த நட்சத்திர மண்டலம் குறைவாகவே பிரகாசிக்கும். நட்சத்திர மண்டலங்களில் பரப்பளவில் இது மிகவும் விசாலமானது பிரபஞ்சத்திலுள்ள நட்சத்திர மண்டலங்களில் நூற்றுக்கு அறுபது சதவீதமானவை இவ்வகை நட்சத்திர மண்டலங்களாகும். (-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்வரும் படங்களின் ஆங்கிலப் பெயருக்குரிய முதலெழுத்தில் X அடையாளமிடுக

1




## ஒரே மாதிரியான உருவுடன் இணைக்க

2



## குழம்பியுள்ள வசனங்களை ஒழுங்கமைக்க

4

1. சவுதி அரேபியாவாகும்/மத்திய கிழக்கு/ மிகவும் பெரிய நாடு/ நாடுகளிலேயே

.................................................................

2. மிகப் பெரிய ஆலமரம்/ பூங்காவில்/ உலகின்/ உள்ளது/ கல்கத்தா தாவரவியல்

.................................................................

3. பறவை இனம்/ துருவப் பிரதேசத்தில்/ புறா ஆகும்/ வாழாத

.................................................................

4. கறிவேப்பிலையில்/ சத்து/ வாய்ப்புண்/ காணப்படுகின்றது/ வராமல் தடுக்கும்

.................................................................

5. காவல் நிலையம்/ வத்திக்கான்/ உலகில்/ இல்லாத நாடு

.................................................................





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.03.02ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 301**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## கட்டங்களுக்குள் உள்ள குறிப்பின்படி வட்டமிடுக

3




ஒவ்வொரு சொல்லிலும் உள்ள மற்றொரு சொல் தருக

5

✱ உ+ம்: கண்டம் - கண்

1. தேநீர் - ..............................
2. விற்பனை - ..............................
3. புரவி - ..............................
4. பூச்சாடி - ..............................
5. பட்டம் - ..............................

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 298 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம். எச். மகுபா, 786, மக்காமடி வீதி, ஏறாவூர்.

**போட்டி: 02**
முஸ்லிஹ் ரிஸ்வி,
64, ஜஸ்டிஸ் அக்பர் மாவ., கொழும்பு - 02.

**போட்டி: 03**
டி. எஃப். ஷாதியா,105/1, குருகொட, அக்குறனை.

**போட்டி: 04**
ஆர். ராஜலக்ஷ்மி,
8/11[D], சிசிர புவக்கொடமுல்ல, பதுளை.


**போட்டி: 05**
மேரி டில்சிகா, பிடாரி கோவிலடி, ஆனைக்கோட்டை.

பாராட்டுப் பெறுவோர்:

* எஃப். ஷீமா, மடவளை.
* நாராயணன், கொழும்பு - 04.
* எஃப். ஹிஷ்மா, கொச்சிக்கடை.
* எம். இஸ்தியாக், கண்டி.
* ஆர். டெறன் பேடினன், அநுர புளத்சிங்கள.
* எஃப். அப்ரா, காத்தான்குடி - 01.
* தி. ஸ்ரீபன், மன்னார்.
* எஃப். ஜுமானா, கெலிஓய.
* ர. டினோஜா, முள்ளியவளை.
* கே. சத்திய பிரியா, வெல்லம்பிட்டிய.

## அறிவுக்கு விருந்து 298 விடைகள்

**போட்டி: 2**




**போட்டி: 4**

1. எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்.
2. குணம் பெரிதேயன்றிக் குலம் பெரியதன்று.

**போட்டி: 5**

1. சூரியன் - sun
2. மகன் - son
3. தங்கம் - gold
4. வெள்ளி- silver
5. கை - hand

## விஜய் வாசகர் மடல்



'இலங்கையின் அமைவும் அதன் தாக்கமும்', 'அஜந்தா-சீகிரியா ஓவியங்கள்', 'வரலாற்றிலிருந்து' என்பவை பாடசாலை வரலாறு பாடத்துக்குப் பெரிதும் உதவின. அத்துடன், உன்னில் ஏராளமான குட்டித் தகவல்களையும் சிறிய ஆக்கங்களையும் காணக்கூடியதாக இருக்கின்றன. அவை அளவில் சிறிதானாலும் காரம் பெரிது என்று சுருக்கமாகக் கூறலாம். வரவர நீ புதுப்பொழிவு பெறுகின்றாய். உனக்கு எனது வாழ்த்துக்கள்.

**-ர.மோகனதர்ஷன், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**

நான் பல வருடங்களாக உன்னிடமிருந்து பல பயன்களை அடைந்து வருகின்றேன். இதுவரை உன்னில் எந்தக் குறையையும் நான் காணவில்லை. உன்னில் பிரசுரமாகின்ற 'இராமாயணம்', ' ஒல்லாந்தர்' போன்றவற்றைத் தொடர்ந்து வாசித்து வருகின்றேன். 'வேப்பமரத்தடிப் பேய்' எனும் தொடர்கதை மிகவும் சுவாரஸ்யமாக இருக்கின்றது.

**-ஹஸ்னா பேகம், மதவாக்குளம் மு.ம.வித்.,மதவாக்குளம்.**

அம்பாறை மாவட்டத்தில் வெள்ளம் காரணமாக, கடந்த 12.01.2011 ஆம் திகதி 'விஜய்' பத்திரிகை எடுக்கத்



தவறியதால் மிகவும் கவலையாக இருந்தது. ஆனால், அதனைப் பெறக்கூடிய வாய்ப்பைக் கொடுத்து எனது கவலையை நீக்கினாய். உனக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். 'உலகப் புகழ் பெற்றவர்களில் 10 பேர்', 'ஐ.நா.வின் குடும்ப அங்கத்தவர்கள்' மட்டுமன்றி, நீ சுமந்து வந்த அனைத்தும் பாராட்டத்தக்கவை.

**-சோ.தினேஸ்குமார், தரம்-13(கலை), ஸ்ரீ கோரக்கர் த.ம.வித்., சம்மாந்துறை.**

நீ சுமந்து வந்தவற்றில் 'விண்வெளித் தகவல்கள்', 'ஆங்கில மொழிப் பயிற்சி', 'வாரம் ஒரு நாடு' மற்றும் 'பரீட்சையில் வெற்றி பெறும் வழிகள்' என்பவை எனக்கு மிகவும் பிடித்தவை. உனது புகழ் எங்கும் பரவ எனது வாழ்த்துக்கள்.

**-சி.லினோசன், திருநாவற்குளம், வவுனியா.**

'கல்வி முகாமைத்துவம்' எமது அறிவுக்கு வித்திடுவதாக அமைந்துள்ளது. 'வேப்பமரத்தடிப் பேய்' என்ற தொடர் கதையை ஒவ்வொரு வாரமும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

**-எஃப்.இல்மா, தரம்-10[G], ஸாஹிரா கல்., தர்கா நகர்.**

'பரீட்சையில் வெற்றி பெறும் வழிகள்', 'கல்வி முகாமைத்துவம்' என்பன மிகவும் பயனுள்ளதாக அமைந்தன. 'அஜந்தா-சீகிரியா ஓவியங்களின் ஒற்றுமை', 'ஐ.நா.வின் குடும்ப அங்கத்தவர்கள்' என்பன பாடங்களுக்கு உறுதுணையாக அமைந்திருந்தன. 'வாரம் ஒரு நாடு' மற்றும் 'உலகப் புகழ் பெற்றவர்களில் 10 பேர்' போன்றவை மிகவும் பயனுடையவை.

'வேப்பமரத்தடிப் பேய்' மிகவும் விறுவிறுப்பாக நகர்கின்றது. 'தெரிந்து கொள்வோம் பகுதி', 'கிரிக்கெட் பற்றிய தகவல்கள்', 'விண்வெளி பற்றிய தகவல்கள்' போன்றவை மிகவும் சுவாரஸ்யமானவை.

**-எஃப்.ஹஸ்னாத், தரம்-9, பாத்திமா பா.ம.வித்., புத்தளம்.**

'மக்கள் தொடர்பின்றி வாழும் ஆதிவாசிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்', 'கனவுகள் தோன்றுவது எவ்வாறு?', 'ஐ.நா.வின் குடும்ப அங்கத்தவர்கள்', 'பரீட்சையில் வெற்றி பெறும் வழிகள்' என உன்னில் பிரசுரமாகியிருந்த அனைத்தும் வாசிக்க வாசிக்க அறிவையும் ஆலோசனைகளையும் தரத் தவறவில்லை. உன் சேவை என்றும் தேவை!

**-எம்.பைசல், பள்ளிவாசல் வீதி,களுத்துறை.**

நீ சுமந்து வரும் அனைத்து விடயங்களும் சூப்பர். 'பரீட்சையில் வெற்றி பெறும் வழிகள்', 'அஜந்தா-சீகிரியா ஓவியங்களின் ஒற்றுமைகள்', 'வாரம் ஒரு நாடு' உட்பட அனைத்தும் என் மனதைக் கவர்ந்துள்ளன. நீ இன்னும் பல புதுமைகளைப் படைத்து முன்னேற வாழ்த்துகிறேன்.

**-த.அபிராமி, தரம்-13(கலை), மட்/பெரியகல்லாறு மத்.கல்., கல்லாறு.**

நல்ல சுவாரஸ்யமான தகவல்களை வாரம்தோறும் கொண்டு வருகிறாய். 'ஆங்கில மொழிப் பயிற்சி', 'ஓவியம் வரைவோம்', 'வாரம் ஒரு நாடு' போன்ற தொடர் பகுதிகள் சிறப்பானவை. ஆக்கங்களில் பெயர் குறிப்பிடத் தவறினாலும் ஒட்டு மொத்தத்தில் நீ எங்கள் கல்விக்கு வழிகாட்டுகின்றாய் என்றே கூறவேண்டும்.

**-பைஸ் அஹமட், அ/நாச்சியாதீவு மு.ம.வித்., நாச்சியாதீவு.**

**இந்த இதழில் (23.02.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02.03.2011.

**அனுப்ப வேண்டிய முகவரி:**



**வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் தேவைகளில் ஊசியின் பங்கு



சிறிய பொருளான ஊசி மனித வரலாற்றில் பெரும் பங்கை வகிக்கிறது. அத்தியாவசிய பொருட்களில் ஊசிக்கு குறிப்பிடத்தக்க இடம் உண்டு. உடைகளைத் தைப்பதற்கு ஊசி அவசியம் தேவைப்படுகிறது. ஆதிகாலத்தில் இருந்தே ஊசிகள் பயன்படுத்தப்பட்டு வந்ததாக வரலாறுகள் மூலம் தெரியவருகிறது.

உலகில் முதலாவது ஊசியானது எலும்பினால் உருவாக்கப்பட்டு மிருகங்களின் தோல்களை இணைத்துத் தைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகப் பழைமையான ஊசி தென்மேற்கு பிரான்சில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஊசி சுமார் 25,000 வருடங்கள் பழைமை மிக்கதெனக் கணக்கிடப்பட்டுள்ளது. செம்பு, வெள்ளி, வெண்கலம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட ஊசிகள் புராதன எகிப்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.



மிகப் பழைமையான இரும்பு ஊசி ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனத் தெரிகிறது. மத்திய காலப்பகுதியில் புத்தகம் கட்டுவோரும், பாதணி தயாரிப்பாளர்களும் காட்டுப் பன்றியின் ரோமங்களால் உருவாக்கப்பட்ட ஊசிகளைப் பயன்படுத்தியுள்ளனர். சுதேச அமெரிக்கர்கள் முள்ளம்பன்றியின் முற்களை தையல் ஊசியாகப் பயன்படுத்தியுள்ளனர்.

ஐரோப்பியர்கள் ஊசி தயாரிக்கும் கலையை அராபிய ஊசி தயாரிப்பாளர்களிடமிருந்து கற்றுக்கொண்டனர். அதுவே 17 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பரவலாயிற்று. தற்போது இங்கிலாந்தில் ஊசித்தயாரிப்புத் தொழில் பிரபலமாக உள்ளது.

# பாதணி தோன்றிய காலம்



இன்று பல்வேறு ரகங்களில் காணப்படும் பாதணிகள் கால்களைப் பாதுகாக்கும் பொருளாக மட்டுமன்றி, ஓர் ஆடம்பரப் பொருளாகவும் திகழ்கின்றன. அதனால்தான் இவை பல்வேறு ரகங்களில் நவீன முறைகளில் தயாரிக்கப்படுகின்றன. ஆனால், ஆதிகாலத்தில் பாதணிகள் கால்களைப் பாதுகாக்கும் கட்டாயத் தேவைக்காகவே அணியப்பட்டன.

பாதணிகள் தோன்றிய ஆரம்பகாலத்தை நோக்குகையில்; நமக்குத் தெரியவந்துள்ள தகவலின்படி, ஆரம்பத்தில் செருப்பு வகைகளே (Sandals) வந்துள்ளன. இவை கி.பி 7000 முதல் 8000 ஆண்டுகால பழைமை மிக்கவை. உலகின் மிகப் பழைமைமிக்க தோல் சப்பாத்து பசுத்தோலில் உருவாக்கப்பட்டுள்ளது. கி.பி 3500 ஆண்டுகால பழைமையானது என நம்பப்படும் இந்த சப்பாத்து 2008 ஆம் ஆண்டு ஆர்மேனியாவின் குகை ஒன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.



ஸ்பெயினில் கண்டுபிடிக்கப்பட்ட 6 ஆம், 7 ஆம் நூற்றாண்டு கால பழைமை மிக்க எஸ்பர்ட்டோ (Esparto) என்னும் புல்லினால் செய்யப்பட்ட செருப்பு (Sandal) வகை



பழைமையான தோல் சப்பாத்து

மனித உடலியல் சாஸ்திர நிபுணரான எரிக் டிரின் காவுஸ் (Erik Trinkaus) பாதணிகள் தோன்றிய ஆரம்பகாலம் பற்றித் தெரிவிக்கையில், ''சுமார் 26,000 ஆண்டு முதல் 40,000 ஆண்டுகளுக்கு முன்னரே பாதணிகள் அணியப்பட்டதற்கான தடயங்கள் தமக்குக் கிடைத்திருப்பதாகக் கூறினார்.


அக்காலப் பகுதியில் கால் விரல் எலும்புகளில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும் மற்றும் கடும் குளிர் காரணமாகவும் சப்பாத்துக்கள் அணிய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.



மனித உடலியல் சாஸ்திர நிபுணர் எரிக் டிரின் காவுஸ்

காலப்போக்கில் பாதணிகள் அத்தியாவசிய பாவனைக்கு மட்டுமன்றி; நவீன நாகரிக அணியாகவும் மாற்றமடைந்தது. இதேவேளை, சுமார் 1800 ஆம் ஆண்டு காலம் வரை பாதணிகள் இடது, வலது கால்களுக்கு ஏற்றவகையில் வித்தியாசமான தோற்றம் இன்றியே தயாரிக்கப்பட்டன. 20 ஆம் நூற்றாண்டு காலத்திலிருந்தே பாதணிகள் றப்பர், பிளாஸ்டிக், துணி போன்ற பல்வேறு பொருட்களையும் கொண்டு நவீனமாகத் தயாரிக்கப்படுகின்றன.

# அழிந்துவிட்டதாகக் கருதப்பட்ட உயிரினங்கள்



அழிந்து விட்டதாகக் கருதப்பட்ட கத்திமீன் (Knife Fish) தவளை நண்டு (Frog Crab) மற்றும் சில ஆழ்கடல்வாழ் உயிரினங்கள் ஒரு நூற்றாண்டுக்குப் பின் தற்போது இந்தியக் கடலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சாகர் சம்ப்டா (Sagar Sampda) என்னும் கடல் ஆராய்ச்சிக் கப்பலில் சென்ற ஆய்வாளர்களே, இவற்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த உயிரினங்கள் ஆழ்கடலில் சுமார் 265 மீற்றர் முதல் 457 மீற்றர் ஆழத்தில் வாழக்கூடியவை. இதுபற்றி ஆய்வாளர்கள் தெரிவிக்கையில், இந்த வகை மீன்களில் ஒன்பது இனங்கள் உலகின் பல பகுதிகளிலும் உள்ளன. இவற்றில் நான்கு இனங்கள் இந்திய கடலில் உள்ளன. இவை கடல்பாசி,நுண்ணிய கடல்வாழ் புழுக்கள் மிகச் சிறிய மீன்கள் என்பனவற்றை உணவாகக் கொள்கின்றன. இந்தியப் பெருங்கடல், பசுபிக் பெருங்கடல், செங்கடல் என்பனவற்றில் இவை வாழ்கின்றன. மன்னார் வளைகுடாவில் அதிகம் வாழ்பவை கத்திமீன்கள். இவை வெள்ளி நிறத்தில் தட்டையாகக் காணப்படும்.



பெரும்பாலும் பவளப்பாறை மற்றும் சேற்றுப் பகுதிகளில் உயிர் வாழும். சாதாரண மீன்களைப் போல் அல்லாமல் செங்குத்தாகவே இந்த மீன் நீந்தும். இவை உண்ணக்கூடியவை அல்ல. அழகுக்காக வளர்க்கப்படுபவை.

இறுதியாக, இந்த மீன் இனம் 1898 இல் அந்தமான் கடல் பகுதியில் பிடிக்கப்பட்டது. இன்னொரு அரிய இனம் தவளை நண்டு இனம். தவளை மற்றும் நண்டின் கலப்புத் தோற்றம் இதில் காணப்படுவதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது. இதில் பதினொரு இனங்கள் உள்ளன. தொடர்ந்து நடத்தப்படும் ஆராய்ச்சிகளில் மேலும் பல கடல்வாழ் உயிரினங்கள் கண்டுபிடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.


## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | - ரூபா 390/= | 6 மாதத்திற்கு | - ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | - ரூபா 780/= | 1 வருடத்திற்கு | - ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ....................................
....................................
முகவரி - ....................................
....................................
தொ.பேசி - ....................................
பத்திரிகையின் பெயர் - ....................................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
....................................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:

**SUBSCRIPTION MANAGER,
Wijeya Newspapers Ltd.,
8, Hunupitiya Cross Road, Colombo-02**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook Addict

# 'ஃபேஸ்புக்' பாவனையாளர்கள் மனோநலம் பாதிப்புற்றவர்களா?



'ஃபேஸ்புக்' மீது மிதமிஞ்சிய அளவில் ஈடுபாடு காட்டுவது ஒருவித உளவியல் கோளாறாக இருக்கலாம் என்றவோர் சந்தேகத்தை ஓர் ஆய்வு எழுப்பியுள்ளது.

அமெரிக்காவின் 'ஒக்ஸிஜன் மீடியா' (Oxygen Media) என்ற நிறுவனமே இந்த ஆய்வினை நடத்தியுள்ளது. இவர்களது ஆய்வின்படி, 'ஃபேஸ்புக்' பாவனையாளர்களில் அதிகமானோர் பெண்களாகவே இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

குறிப்பாக 18-34 வயதிற்கு இடைப்பட்டவர்களே இதில் அதிகமாம். இவர்களில் 57 வீதமானோர் தமது நண்பர், நண்பியரை நேரில் சந்தித்துக் கதைப்பதைவிட 'ஃபேஸ்புக்' ஊடாகவே தொடர்பு கொள்வதாக மேற்படி ஆய்வை நடத்திய குழுவினர் தெரிவித்துள்ளனர். மேலும் 39 வீதமானோர் தெரிவித்துள்ள கருத்துக்களின்படி, தாம் உண்மையிலேயே 'பேஸ்புக்'கிற்கு அடிமையாகியிருப்பதாக குறிப்பிட்டுள்ளனர். அதிகாலையில் நித்திரையிலிருந்து எழுந்தவுடன் காலைக்கடன்களை முடிப்பதற்கு முன்னர் 'ஃபேஸ்புக்'கிற்குள் நுழைந்து நண்பர்களின் புதினங்களை அறிவதிலேயே ஆர்வம் காட்டுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, இவ்வாறு மிதமிஞ்சிய அளவில் 'ஃபேஸ்புக்' மீது அடிமையாவது ஒருவித மனோநலப் பாதிப்பாக இருக்குமா? என்ற கோணத்தில் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்த அடிமையாதலுக்கு 'ஃபேஸ்புக்' எடிக்ஷன் டிஸோடர் (FAD- Facebook Addiction Disorder) என விஞ்ஞான ரீதியிலான பெயரும் வைத்தாகிவிட்டது. இன்னும் சில தரப்போ இதனை ஃபேஸ்புக்கின் மீதான மனோவியல் கோளாறு என்றே நேரடியாகக் குறிப்பிடுகின்றனர். பொதுவாகப் பார்க்கையில் பெண்கள் மட்டுமன்றி சகல தரப்பையும் சேர்ந்த அநேகர் இந்த நிலைக்கு ஆளாகியே உள்ளனர்.

'ஃபேஸ் புக்'கில் நாளொன்றிற்கு 55 கோடி பாவனையாளர்கள் உலா வருகின்றனர். அதுமட்டுமன்றி; ஒவ்வொரு நாளும் 7 லட்சம் பேர் புதிதாக 'ஃபேஸ்புக்' உறுப்பினர்களாக சேர்கின்றனர். இதன்படி, பார்த்தால் 2012 ஆம் ஆண்டை அடைகையில் 'ஃபேஸ்புக்' பாவனையாளர்களின் எண்ணிக்கை 100 கோடியை எட்டிவிடும்.

'ஃபேஸ்புக்'கில் உறுப்பினர்களாக உள்ள 55 கோடி பேரில் 30 கோடிக்கும் அதிகமானோர் தினமும் 'ஃபேஸ்புக்'கில் உலா வருகின்றனர். ஒரு மணிநேரத்திற்கும் மேல் தனிப்பட்ட முறையில் தமது நேரத்தை இவர்கள் 'ஃபேஸ்புக்'கில் செலவிடுகின்றனர். தமது தொழிலுக்கு-கடமைக்கு செலவிட வேண்டிய நேரத்தை இவ்வாறு வீணே செலவிடுவது ஒருவகையில் மனோநலப் பாதிப்பாகவே கருதமுடியும் என்றே ஆய்வுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.








## ஆய்வுகள் வெளிப்படுத்தும் உண்மைகள்

எனவே, நல்லதோர் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட இந்த 'ஃபேஸ்புக்' கானது இவ்வாறு திசை மாறிப் போவது உலகளாவிய ரீதியில் எதிர்காலத்தில் உளவியல் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள சமூகமொன்றை உருவாக்கி விடக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.



# புதிய 'சிப்' அறிமுகம்



கணினி சிப் (Chip)களை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களில் முன்னணியில் உள்ள Advanced Micro Devicesineis எனப்படுகின்ற AMD நிறுவனமானது அதன் புதிய APU 'சிப்'பினை சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவின் பெங்களூர் நகரில் அறிமுகம் செய்தது.

கணினியின் செயற்பாட்டை விரைவுபடுத்தக் கூடியதாகவும் பெற்றரியின் (மின்கலம்) ஆயுள் காலத்தை அதிகரிக்கக்கூடியதாகவும் உயர் தரத்திலான கிரஃபிக்ஸ் பாவனையை வழங்கக்கூடிய தன்மையையும் இந்த 'சிப்' கொண்டிருப்பதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் இந்த 'சிப்'பை இந்தியாவில் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் மேற்படி நிறுவனம் குறிப்பிடுகின்றது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 23, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org